நாவலர்
சித்தன்கேணி
91 A/L
பொருளியல்
தேசிய வருமானம்
By; Mr. கலாகரன்
Sat, Sun - 3 p.m.
''கசடறக்கல்''

பக்கங்கள் எட்டு — விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 132 சனி 16-6-1990 ஆனி 02 துல்ஹஜ்தா 2.

நாவலர்
சித்தன்கேணி
90 A/L
வர்த்தகமும் நிதியும்
மீட்டலும் வினாவிடையும்
By: Mr தேவா
Sat, Sun 7 to 8 a.m-
மாணவர் உலகின்
கலங்கரை விளக்கு
நாவலர்

பொதுசன நூலகம்
வாசிகசாலைப்
1993 ·07·
பகுதி

★ நேற்று நல்லூரில் 4 மணித்தியாலப் பேச்சுவார்த்தை
★ பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றம்

# புலிகள் - ஹமீத் சந்திப்பு
# இன்றும் தொடர்கிறது

(கே. வி. ஆர். ஸ்ரீ)

**நேற்று முற்பகல் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தற்போதைய நெருக்கடி சூழ்நிலை குறித்து அதிமுக்கிய பேச்சுவார்த்தைகள் நடத்திய பின் அமைச்சர் ஜனாப் ஹமித் கொழும்பு திரும்பியுள்ளார்**

நீதியமைச்சர் ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீத் ஜனாதிபதியுடன் கலந்தாலோசனை நடத்தியபின் இன்று காலை மீண்டும் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளைத் தொடரவுள்ளார் என அறிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை விசேட விமானம் மூலம் பலாலிக்கு வந்த அமைச்சரை விடுதலைப் புலிகள் தமது பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் அழைத்து வந்தனர்.

நல்லூரில் இருதரப்பினரும் நடத்திய பேச்சுவார்த்தைகள்

— 08 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா நகரில் கடும் சண்டை மூவாயிரம் பேர் அகதிகளாகினர்

வவுனியா நகரில் விடுதலைப் புலிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்குமிடையே பலத்த சண்டை நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் எதிரொலியாக நகரிலிருந்து மூவாயிரம் பொதுமக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர் என்றும் தகவல் கிடைத்துள்ளது.

இவர்கள் அயல் கிராமங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மேற்படி மோதலினால் ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் பற்றிய மேலதிக விவரங்கள் நேற்று நள்ளிரவு வரை கிடைக்கவில்லை.

### 3 இராணுவ முகாம்கள் புலிகள் வசம்

## திருமலையிலும் பலத்த மோதல் பல தமிழர் கடைகள் தீக்கிரை

திருகோணமலை நகரில் கடும்மோதல் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

மூன்று தினங்களாகத் தொடர்ந்துஉக்கிரமாக நடைபெற்று வரும் இம் மோதலின் எதிரொலியாக நகரில் உள்ள தமிழர்களின் பலகடைகள் தீக்கிரை யாக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

இது இவ்வாறு இருக்க கொழும்பு- திருகோணமலை வீதியில் திருகோணமலை மாவட்டத்தில் பேரூந்து ஒன்றில் வந்த பத்துத் தமிழர் வெட்டிக்கொல்லப்பட்டதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

திரியாய், தோப்பூர், கிண்ணியா இராணுவ முகாம்களில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வெளியேறி விட்டனர். இவை இப்போது புலிகள் வசமுள்ளன.

## உப்புவெளி, கன்னியா உட்பட நான்கு புலிகளிடம்

குச்சவெளி, மூதூர் பகுதிகளில் சண்டை நீடிப்பதாக அறிவிக்கப்படுகிறது.

உப்புவெளி, திருமலைநகர் கன்னியா, அபயபுரம் பொலிஸ் நிலையங்கள் புலிகள் வசம் வந்துள்ளன.

திருமலை - மடத்தடியிலும் மோதல் தொடர்கிறது அம்பாறை-இறக்காமத்திலும் இந்நிலைதான் எனத் தெரி

—8 ம் பக்கம் பார்க்க

## மூதூரில் பீரங்கித்தாக்குதல் 3 பொதுமக்கள் பலி

மூதூரில் நகரப் பகுதியை நோக்கி ஸ்ரீலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தினர் என்று நேற்றுஅறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலால் மூன்று பொதுமக்கள் பலியாகினர் ஏனைய விவரங்கள் தெரியவரவில்லை. (ஸ்ரீ)

## புனானையில் டாங்கிகள் கவசவாகன தாக்குதல்

புனானையில் டாங்கிகள் கவச வாகனங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

பல இடங்களில் பொம்பர், ஹெலித்தாக்குதல்கள் தொடர்வதாகவும் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி., கும்புறுமூலையில்

—08ஆம் பக்கம் பார்க்க

## தலைமன்னார் கடற்படை முகாம் கைப்பற்றப்பட்டது

தலைமன்னார் துறைமுக கடற்படை முகாம் விடுதலைப் புலிகளினால் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளது. இத் தாக்குதல் சம்பவத்தின்போது 10க்கும்மேற்பட்டபடையினர் கொல்லப்பட்டனர். இருவிடுதலைப்புலிகள் வீரமரணத்தை தழுவியுள்ளனர்.

இத்தாக்குதலின் போது பெருமளவு ஆயுதங்கள், வெடி

— 08 ஆம் பக்கம் பார்க்க

# பலாலியில் ஷெல், ஹெலி, பீரங்கி தாக்குதல்; எழு பேர் மரணம்

மோதல் நீடிப்பு

(எஸ். ஆர். எம்)

பலாலியும் சுற்றாடலும் ராணுவத்தின் திடீர் நடவடிக்கையால் பெருத்த பரபரப்புக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாகின மக்கள் திகிலடைந்து தூரஇடங்களுக்கு இடம்பெயரத் தொடங்கினர்.

பலாலி முகாமிலிருந்து நேற்று பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலின் போது இராணுவத்தினர் ஷெல் வீச்சுக்களுடன் ஹெலித்தாக்குதல்களையும் மேற்கொண்டனர். கடலில் இருந்து பலாலியை அண்டியுள்ள பகுதிகளை நோக்கி பீரங்கிப் படகுகளும் தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

செய்தி எழுதப்படும் வரை இத் தாக்குதல் தொடர்ந்து இடம் பெறுவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினரின் ஷெல் வீச்சுக்களாலும் பீரங்கித் தாக்குதல்களாலும் சுமார் 50 பேர் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

பலாலி, கட்டுவன், குரும்சிட்டி, மயிலிட்டி, குப்பிளான், ஏழாலை, மல்லாகம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பு இடங்களை நோக்கி வெளியேறிக்கொண்டுள்ளனர். இங்குள்ளவர்

— 08ஆம் பக்கம் பார்க்க

இந்து சமய விவகார அமைச்சினால்

## அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பு

அறநெறிப் பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு பயிற்சிவகுப்பு ஒன்றை நடத்தும் பொருட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கையின் பல பாகங்களிலும் அமைந்த இந்து அறநெறிப் படசாலைகளுக்கு நூல்கள் அப்பியாசப் புத்தகங்கள், ஊக்குவிப்பு நிதி உதவிகள் என்பனவும்வழங்கப்படும்.

ஒவ்வொரு அறநெறிப் பாடசாலைகளில் இருந்தும் இரு ஆசிரியர்கள் இப்பயிற்சியில் கலந்து கொள்ள வாய்ப்பு உண்டு.பதிவு செய்யப் படாத அறநெறிப்பாடசாலைகள் உடனடியாக திணைக்களத்தில் இருந்து பெறப்படும் விண்ணப்பப் படிவங்கள் மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

பதிவு செய்யப்படாத அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் பயிற்சி வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட பாடசாலையின் ஆசிரியர்கள் இருவரின் பெயர்களை தெரிவு செய்து தலைவர், செயலாளர் அத்தாட்சியுடன் இந்து சமய இந்து கலாசார அலுவலங்கள் திணைக்களத்தில் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

எரிபொருள் பெரும் தட்டுப்பாடு

## வாகனங்களில் பறந்தோர் சைக்கிளே தஞ்சமெனும் நிலை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இப்போது எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

வாகனங்கள் பெற்றோல், டீசலுக்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் கொளுத்தும் வெயிலில் நிற்பதை நேற்று பல இடங்களில் காண முடிந்தது. தருணத்தைத் தமக்குச் சாதகமாக்கிச் சிலர் எரிபொருளை கொள்ளை விலையில் விற்பதும் தெரியவந்துள்ளது.

வாகனக்காரரர்கள் பலரும் இத்தட்டுபாட்டின் எதிரொலியாகச் சைக்கிள் சவாரி செய்ததையும் அவதானிக்க முடிந்தது.

போக்குவரத்துச் சீர்குலைவினால் எரிபொருள் தட்டுப்பாடு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது.

மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் விவசாயிகளும் இடருறுகின்றனர். (48)

## பக்தாத் தேவாலய சுவரில் மரியாளின் அதிசயஉருவம்

ஈராக் தலைநகரான பக்தாத்தின் டோரா மாவட்டத்தில் உள்ள சென். சாயா சிரிய கத்தோலிக்க தேவாலயத்தின் சுவர் ஒன்றில் கன்னி மரியாளின் உருவம் தோன்றி உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த அதிசய நிகழ்ச்சியினைக் காண்பதற்கெனத் தினமும் ஆயிரக்கணக்கில் மக்கள் அத் தேவாலயம் நோக்கிப் படையெடுக்கின்றனர்.

சுவரில் தோன்றிய கன்னி மரியாளின் முகம் கவலை தோய்ந்து காணப்படுவதாகவும், நடுத்தர வயதுப் பெண்ணை ஒத்ததாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கண்களை மூடித்திறந்து கொண்டிருக்கும் கன்னி மரியாளின் திரு உருவத்தைக் காண்பதற்கு ஈராக்கிய மற்றும் வெளிநாட்டுக் கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் காத்து நிற்கின்றனர். (7கி)

## யாழ் தொழில் நுட்பக்கல்லூரிக்கு பிரிட்டிஷ் அரசின் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழிநுட்பக்கல்லூரியில் எட்டுக்கோடி ரூபா செலவில் நவீன உபகரண வசதிகளுடன் பொறியியல் ஆய்வுகூடம் ஒன்று பிரிட்டிஷ் அரசின் உதவியுடன் அமைக்கப்பட இருக்கின்றது.

இக்கல்லூரியின் குறைபாடுகளை நீக்கித் தரத்தினை உயர்த்தி எடுத்த முயற்சிகளை 83-ம் ஆண்டில் அமுலாக்க முடியவில்லை. தளபாடவசதிக்குறை, வகுப்பறை வசதிக்குறை நீக்கப்பட்டால் 35 சதவீதமான மாணவர்கள் மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். தற்போது ஐயாயிரம்,மாணவர்கள் பாடநெறிக்கு விண்ணப்பித்திருந்தும் இவற்றில் தொள்ளாயிரம் மாணவர்கள் வரையிலேயே சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள்.

கட்டடத்திருத்தம் மின்சார வசதி நூலகவசதி ஆய்வுகூட வசதி என்பன தரம் உயர்தப்பட்டால் தொழில்நுட்பக்கல்வியை பிரித்தானிய நாட்டிற் கற்பிக்கப்படும் பயிசிற்நெறிகளுக்கு ஏற்ற தராதரத்தில் உயர்த்த முடியும். இதன் மூலம் கூடியளவு மாணவர்கள் பயன் பெறமுடியும்.

சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் பொறியியல் ஆய்வுகூடம் அமைக்கப்பட்டதும், உயர் தொழில்நுட்பத் தேசிய டிப்ளோமாப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படும். பிரிட்டனில் உள்ள வியாபாரத் தொழிநுட்பப் பயிற்சி நெறிக்குச் சமமானதாக இப்பயிற்சி நெறி அமையும். (கி)

## தூர இட பஸ் சேவை நேற்றும் இல்லை

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்கான தூர இடபஸ்சேவைகள் எதுவும் நேற்றும் இடம் பெறவில்லை.

யாழ். நகரிலிருந்து பளைக் கப்பால்நேற்றைய பஸ் சேவைகள் இடம் பெறவில்லை. மன்னாருக்கான பஸ் சேவை சங்குப்பிட்டிக் கூடாக வழமை போல் நடைபெற்று வருகின்றது. (4கி)

## மந்துவிலில் கலைவிழா

(நாவற்குழி)

மந்துவில் கேலம் இந்து இளைஞர் மன்றத்தினால் நடாத்தப்படும் கலை விழா இன்று சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு மந்துவில் கேலம் அம்பாள் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

திரு.தி. சிவசுதன் தலைமையில் நடைபெற இருக்கும் இவ்விழாவில் தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் திரு எஸ்.பி.கே. பாப்பா, தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத் தலைவர் சிவ ஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், தென்மராட்சி மாணவர் அமைப்புப்பொறுப்பாளர் திரு. ரஞ்சன், மந்துவில் பிரதேசப் பொறுப்பாளர் திரு.வேல்ஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொர்ள்வார்கள்.

இவ்விழாவை முன்னிட்டு கலை நிகழ்ச்சிகளும், பட்டிமன்றமும், நாடகமும் நடைபெறவுள்ளன. இதற்கான சகல ஏற்பாடுகளையும் மந்துவில் சிற்றூரவைத் தலைவர் வே. இரத்தினசிங்கம் மேற்கொண்டுள்ளார். (கிப5 )

## ஊரெழுவில் இன்று

கோப்பாய் லயன்ஸ் கழக சுகாதார சேவைகள் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஊரெழு கலைவாணி மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் ஊரெழு கணேசா வித்தியாசாலையில் நடை பெறவுள்ளது.

இச் சேவையில் மூக்குக் கண்ணாடி வழங்கல் வெள்ளைப் பிரம்பு வழங்கல், சலரோக பரிசோதனை என்பன இடம் பெறும்.இச்சேவையைப் பெற விரும்புவோர் மேற் குறிப்பிட்ட இடத்திற்கு சமூகமளிக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. (7 கி)

## முரசொலிக்கு கிடைத்தது சபாஷ்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் பற்றி அமைச்சர் திரு.ரஞ்சன் விஜயரத்தின பாராளுமன்றத்தில் தரக்குறைவாக விமர்சித்தது பற்றி புலிகள் கொண்டுள்ள அதிருப்தி பற்றிய செய்தியை முரசொலி தான் அச்சொட்டாக வெளியிட்டது என்று புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வெகுவாகப் பாராட்டுத் தெரிவித்தார்.

கோண்டாவில் தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர்களைச்சந்தித்த போது அவர் இப்பாராட்டை பகிரங்கமாக மனந்திறந்துத் தெரிவித்தார். (ஸ்ரீ)


விலங்கியல்
மாதிரிவினாத்தாள்-90

★ வெளிவந்து விட்டது ★

ஆசிரியர்

R. ஈஸ்வரதாசன்
B. Sc(Cey)

எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும்

மாதிரி வினாத்தாள் விடை வகுப்பு ஆரம்பம்
16-06-90 சனி9.30a.m

PERSONAL CLASSES
B.M.C. முன்லேன்
JAFFNA

06284


## "ராணுவ பலத்தால் ஆட்சி நீடிப்பது அசாத்தியம்"

"எந்நாளும் அரசாங்கம் இராணுவ பலத்தை நம்பி ஆட்சி செய்ய முடியாது "என்று ஐ.சோ. முன்னணி எம்.பி.திரு. வாசுதேவ நாணயக்கார, பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

"விலைவாசி உயர்வு, போக்குவரத்து வசதிக்குறைவு ஆகியவற்றில் கொதித்தெழுந்துள்ள மக்களுடன் இராணுவ சக்தியும் சேர்ந்தால் அன்றே அரசாங்கம் ஆட்டம் கண்டுவிடும்" என்று அவர் எச்சரித்தார்.

"இப்போது பொலிஸார் தமது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள்" என்றும் அவர் குற்றம் சுமத்தினார். (ஸ்ரீ)

## மாணவிகள் பலி

கடந்த செவ்வாய் கல்முனை காமெல்கொன்வென்ற் மகளிர் கல்லூரி விடுதியில் இராணுவத்தின் ஷெல் தாக்குதலினால் ஏழு மாணவிகள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களுள் கன்னியாஸ்திரிகளும் அடங்குவர். இதே சமயம் மல்வத்தை அவளக்கடை முகாம்களில் இருந்து தொடர்ந்து ஷெல் தாக்குதல் நடைபெற்றது.


சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர்
பணிமனை, யாழ்ப்பாணம்

## கேள்விப்பத்திரக் கோரல்

1990-ம் ஆண்டு யூன் மாதம் 26-ம் திகதி காலை 10.30 மணிவரை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அவர்களால் கீழே குறிப்பிட்ட கட்டிட வேலைக்கு ரூபா 350,000/-க்கு மேற்பட்ட தொகைக்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றையதினமே காலை 11.00 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக் காரரோ அவரது பிரதிநிதியோ விரும்பின் சமூகமளிக்கலாம்.

இவ்வேலை செய்ய விரும்புவோர் எவரும் அரச கரும வேலை ஒப்பந்தக்காரராகவோ அல்லது உள்ளூராட்சி ஆணையாளரினால் அல்லது கூட்டுறவு உதவியாளரினால் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இக்கட்டிடவேலை செய்ய விரும்புவோர் 1990-ம் ஆண்டு யூன் மாதம் 22-ம் திகதி காலை 10.00 மணி வரை யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் திரும்பப் பெறக்கூடிய கட்டணமாக ரூபா 350/-ம் திரும்பப் பெறமுடியாத கட்டணமாக ரூபா 50/-ம் காசுக்கட்டளை மூலம் அல்லது இலங்கை வங்கி, யாழ்ப்பாணம், இலக்கம் 23182, சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் கணக்கில் செலுத்தி வங்கிப் பற்றுச்சீட்டுடன் எமது அலுவலகத்தில் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

### கட்டிட வேலை

மருதங்கேணி வைத்தியசாலையில் பிரசவ அறை அமைத்தல்

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டபின் கடித உறையில் அடைக்கப்பட்டு மெழுகுசீல் வைப்பதுடன் கடித உறையின் இடது பக்க மூலையில் "சுகாதாரப் பகுதியின் கட்டிட வேலை" என்று குறிப்பிட்டு மேற்கூறிய திகதிக்கு முன் இப்பணிமனையில் கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும். அல்லது இப்பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடப்படவேண்டும். தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்கள் அவர்களுடைய கேள்விகள் ஏற்கப்பட்டதென்று அறிவித்தல் கிடைத்தவுடன் ஒருவார காலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப்பணத்தைச் செலுத்துவதுடன் இதற்கான ஒப்பந்தத்திற்கும் உடன்படல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்கள், ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வித்தொகையின் 5% ஒப்பந்தத்தின்படி வேலையைத் திருப்திகரமாகச் செய்துமுடிக்க பிணைப்பணமாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நியமிக்கும் வங்கியில் கட்டவேண்டும். வேலை திருப்திகரமாக முடித்தபின் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், எதையாவது நிராகரித்தல் அல்லது முற்றாக நிராகரித்தல் ஆகிய உரிமைக்கும், அனைத்து தீர்மானங்கள் இறுதி முடிவுகள் யாவும் கேள்விச்சபைத் தலைவரைச் சார்ந்தது.

ந. கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

14 யூன் 90

06291

# இல்லை என்பதை இல்லாதொழிப்போம்

இல்லை.. இல்லை.. இல்லை... என்னும் சொல்லுக்கு மீண்டுமொருமுறை மவுசு வந்துவிட்டது.

இன்றைய தினங்களில் எந்தப் பொருளையாவது வாங்கக் கடைகளுக்குச் சென்றால் பதிலாக வரும் சொல் 'இல்லை' என்பதுதான்.

தனியார் கடைகளிலும் பார்க்க ''மக்களின் சேவையே மகேசன் சேவை'' எனக் கூறும் கூட்டுறவுச் சங்கக் கடைகளில்தான் இச்சொல் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது.

ஓரிரு தினங்களுக்கு முன் தாராளமாக விநியோகிக்கப்பட்ட பொருட்கள் திடீரென இல்லாமற் போனதன் மர்மம்தான் என்ன?

நெருக்கடி நிலைகள் வரும் போது அல்லது கொழும்பிற்கான போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்த மறுகணமே ''இல்லை'' என்ற சொல் வழக்கம்போல் தலைகாட்டுகின்றது.

இதனால் சில சந்தேகங்கள் வாசகர்களுக்குத தோன்றலாம். எமது பாவனைப் பொருட்கள் தினமும் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டு அன்றைய தினமே உடனடியாக விநியோகிக்கப்பட்டு விடுகின்றனவா?

அவ்வாறாயின் களஞ்சியங்கள் என்பன பெயரளவில் தானா இயங்குகின்றன?

எமது பிரதேசங்களிலேயே உற்பத்தி செய்யப்படும் பொருட்களும் இந்த 'இல்லைப் பட்டியலில்' எவ்வாறு சேர்க்கப்படுகின்றன?

மேற்குறித்த வினாக்கள் அனைத்தும் உண்மையான தட்டுப்பாடு நில்வும் நிலையில்தான் அர்த்தமுடையவை. ஆனால் இன்று எமது பிரதேசத்தில் நிலவும் தட்டுப்பாடு தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகும்.

நியாய விலைக் கடைகளில் திடீரென மறையும் பொருட்கள் இரு தினங்களின் பின்னர் கறுப்புச்சந்தையில் அதிக விலையிற் தாராளமாகக் கிடைக்கின்றன.

நெருக்கடியான காலங்களில் மக்களுக்குப் பதுங்கு குழிகள் கை கொடுப்பதுபோன்று, வியாபாரிகளுக்குப் பதுக்கல் வியாபாரம் கை கொடுக்கின்றது

உணவுக் கட்டுப்பாட்டு இலாகாவின் கணிப்பின்படி யாழ். குடாநாட்டில் ஆறுமாதங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களும், ஓரிரு வாரத்திற்குத் தேவையான எரிபொருட்களும் உண்டு.

ஆனால் இவ்வளவு தொகைப் பொருட்களும் ஒரு இரவிலேயே தீர்ந்து விட்டதா என்பதே பொது மக்களுக்கு எழும் கேள்வி.

மக்களின் இன்னல்களைச் சாதகமாகப் பயன்படுத்திப் பொருட்களுக்குச் செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கி அதன் மூலம் கூடிய விலைகளில் அவற்றை விற்பனை செய்ய முயல்வதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்குச் சில்லறையாகப் பொருட்களை வழங்க வேண்டுமேயன்றி, வியாபாரிகளுக்கு மொத்தமாக அவற்றைத் தள்ள முயற்சிக்கக் கூடாது.

பதுக்கல், கொள்ளை இலாபம் என்பன சட்டத்தோடு தொடர்புடைய விடயங்கள் மட்டுமல்ல, மனச்சாட்சியுடன் தொடர்புடையவை.

எனவே பெற்றோல் இல்லை, டீசல் இல்லை, அரிசி, மா, சீனி இல்லை என்று கூறுவதை விடுத்து 'இல்லை' என்பதை இல்லாதொழிக்க முயல்வோம். சுரண்டலற்ற சமுதாயத்தில்தான் சுதந்திரம் நிலவும்.

## இதயநாதம்

சனிக்கிழமை 16-06-1990

நல்வாக்கு

இரத்த வெறியர்களும், வஞ்சனையாளர்களும் தங்கள் வாழ் நாளில் பாதியளவு கூட வாழ்வதில்லை.

—பைபிள்.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

---

பிரான்ஸ் டாக்டர் வின்சன்ட் ஆனுடன் ஒரு சந்திப்பு

# இயற்கை அழிவு, யுத்தங்களினால் பாதிப்புற்ற மக்களுக்காக சம்பளமின்றி சேவைபுரியும் பிரான்ஸ் டாக்டர்கள்

அரசியல் கட்டுப்பாடு இல்லாத...... எந்த இடத்திற்கும் கட்டுப்பாடு இல்லாமல் சுதந்திரமாகச் சென்று சேவை செய்வதற்கென 1971 ம் ஆண்டு பிரான்ஸ் டாக்டர்கள் சேர்ந்து உருவாக்கிய அமைப்பே எம்.எஸ்.எப்.என அழைக்கப்படும் எல்லைகளைக் கடந்த வைத்திய சேவைக் குழு அமைப்பாகும் யுத்தங்கள் இயற்கை அழிவுகள் இடம்பெறும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று சேவை செய்யும் இந்த அமைப்பிலிருந்து 30 நாடுகளில் 800க்கு மேற்பட்ட வைத்தியர்கள் தாதிகள் கடமையில் ஈடுபட்டு உள்ளனர்.

இலங்கையில் ஸ்ரீ லங்கா இராணுவம் வடக்கு கிழக்கில் இன அழிப்புப் போரில் உக்கிரமாக ஈடுபட்டபோது......

தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டு அல்லலுற்றபோது... அந்த மக்களுக்காக வைத்திய சேவைக்கென இங்கு வந்த பிரான்ஸ் நாட்டு டாக்டர் குழுவின் அரிய சேவையினை தமிழ் இதயங்கள் இலகுவில் மறந்துவிட முடியாது.

எம். எஸ். எப். என அழைக்கப்படும் பிரான்ஸ் நாட்டு ''எல்லைகளைக்கடந்த வைத்திய சேவைக் குழுவைச் சேர்ந்த டாக்டர் வினசன்ட் ஆன் கடந்த ஒன்பது மாதங்களாக மட்டக்களப்பு பொது வைத்திய சாலையில் குழந்தை வைத்தியநிபுணராகக் கடமையாற்றியவர்.

மட்டக்களப்பு பொது வைத்திய சாலையில் குழந்தை வைத்திய நிபுணராக கடமையாற்றிய உள்ளூர் டாக்டர்கள் வெளிநாடுகளுக்குப் பறந்தபோது

மட்டக்களப்பு பொது வைத்திய சாலையில் குழந்தை வைத்திய நிபுணர் ஒருவர் இல்லாமல் மக்கள் பட்ட கஷ்டங்கள்...அவர்கள் பட்ட துன்பங்கள்...அவை அனுபவங்களின் மூலமே உணர முடியும்.

கையில் தமது குழந்தையை ஏந்தியவாறு கொழும்பிற்கும், கண்டிக்கும் சென்று தமது குழந்தைகளுக்கு வைத்தியம் செய்தவர்கள் மத்தியில் அந்த இடங்களுக்குச் சென்று வைத்தியமே செய்யமுடியாத பாமரத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க இந்த மண்ணிற்கு வந்த டாக்டர் வின்சன்ட் ஆன் ஒரு கடவுளாகவே அந்த பாமர மக்கள் கண்டார்கள்.

அண்மையில் தனது சேவையை முடித்துக்கொண்டு தாயகம் திரும்புவதற்கு முதல் நாள் அவரை சந்தித்து உரையாடினேன்.

பத்திரிகையாளர்களே உண்மையான மக்கள் தொடர்பாளர்கள்என்ற சூட்சுமத்தை புரிந்துகொண்ட டாக்டர் ஆன் எம்முடன் மனம் திறந்து உரையாடினார்.

**இரா. துரைரத்தினம்**

இயற்கை அழிவுகளினாலோ யுத்தத்தினாலோ, பஞ்சத்தினாலோ அல்லலுறும் மக்களுக்கு சாதி, சமய, அந்தஸ்து வர்க்கபேத, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் வைத்திய சேவைக்கென பிரான்ஸ் நாட்டில் அமைக்கப்பட்ட (Medecine Sans Frontieres) எம். எஸ். எப். என அழைக்கப்படும் எல்லைகளுக்கப்பால் வைத்திய சேவை என்ற அமைப்பில் இன்று இலங்கையில் வடக்கு-கிழக்கில் பதினெட்டுப்பேர் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அமைப்பிலிருந்து தற்பொழுது முப்பது நாடுகளில்எண்ணூறுக்குமேற்பட்ட வைத்தியர்கள், தாதிகள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தமது நாட்டிலிருந்து விடுமுறை லீவு எடுத்துக்கொண்டு சம்பளம் இன்றியே வேலை செய்கின்றனர். உணவுத் தேவைக்கு மட்டும் பிரான்ஸ் நாட்டு மக்கள் கொடுக்கும் நன்கொடையிலிருந்து அலவன்ஸ் வழங்கப்படுகிறது.

இந்தஅமைப்பு உருவானதே ஒரு சுவையான கதைதான்.

1969-ம்ஆண்டு ''பைபிரா'' யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்ய என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் பிரான்ஸ் நாட்டு இளம் டாக்டர்களும் சென்றனர், அரசியல் கட்டுப்பாடுகளும், சுதந்திரமாக விரும்பிய இடத்திற்குச் சென்று சேவை செய்ய முடியாத நிலையினையும் கண்டு 1971-ம் ஆண்டு அரசியல் கட்டுப்பாடு இல்லாத, எந்த இடத்திற்கும் கட்டுப்பாடு இல்லாமல் சுதந்திரமாகச் சென்று சேவை செய்வதற்கென்று பிரான்ஸ் டாக்டர்கள் சேர்ந்து ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். அதுதான் ''எல்லைகளைக் கடந்த வைத்திய சேவைக்குழு''.

கடந்த ஒன்பது மாதங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களைச் சந்தித்த டாக்டர் வின்சன்ட் ஆன் அவர்களிடம் இந்நாட்டு மக்கள்பற்றி...உங்கள் வைத்திய சேவையின்போது சந்தித்த அனுபவங்கள் பற்றிக் கூறுங்களேன் எனக் கேட்டபோது அவர் சொன்னார்.



## சிற்றூழியர்களிடம் உள்ள புரிந்துணர்வு உயர் அதிகாரிகளிடம் இல்லை

தமிழ் மக்கள் இனிமையானவர்கள். நல்லவர்கள்... ஆனால் அவர்கள் இலகுவில் நெருங்கிப்பழக மாட்டார்கள் தமது பண்பாட்டுக் கலாசாரத்தில் மிகவும் உறுதியாக இருப்பவர்கள், என நினைக்கிறேன். ஆனால், அவர்கள் அன்பு வைத்தால் பிரிய மாட்டார்கள்.

மட்டக்களப்பு வைத்திய சாலையைப் பொறுத்தவரை மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்குத் தினமும் மருத்துவம் செய்ய வேண்டிய மட்டக்களப்பு மாவட்ட வைத்திய சாலையில் போதிய மருந்து வகைகளும் ஏனைய வசதிகளும் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றன. இது தொடர்பாக வைத்திய உயர் அதிகாரிகள் கூடிய சிரத்தை எடுப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையின் முன்னேற்றத்தில் எந்த அக்கறையையும் எடுப்பதாக எனக்குத் தெரியவில்லை.

மன்னார், பருத்தித்துறை, திருகோணமலை ஆகிய இடங்களில் கடமையாற்றும் பிரான்ஸ் டாக்டர்களுக்குப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட உயர் மட்டத்தில் கிடைத்த ஒத்துழைப்பு எமக்கு மட்டக்களப்பில் கிடைக்கவில்லை என்றுதான் கூறவேண்டும்.

தாதிகள், மற்றும் ஊழியர்கள் எங்களுடன் ஒத்துழைப்புத் தந்து வேலைசெய்ததால் நாம் மகிழ்ச்சியுடன் வேலை செய்தோம்.

எனது சேவைக் காலத்தில் ஓய்வு நேரங்களில் மாந்தீவு தொழுநோயாளர் வைத்திய சாலைக்குச் சென்று அவர்களுடன் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது அவர்களை யாரும் கவனிப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கின்றனர். போதிய வசதிகள் இன்றி நல்ல உணவு வசதியின்றி குடிநீர் வசதியின்றி கஷ்டப்படுகின்றார்கள். தொழுநோயாளர்கள் என அவர்களை ஏன் ஒதுக்கி வைத்திருக்கின்றார்கள்?

அவர்களின் கஷ்டங்கள் என் நெஞ்சைத் தொட்டன. அவர்களைப் பார்ப்பதற்கு

5 ஆம் பக்கம் பார்க்க

வடக்கின் ஆதிக்கம்

# தமிழகத்தில் மீண்டும் எழுகிறது எதிர்ப்புக்குரல்

வட இந்திய அரசியல் ஆதிக்கத்துக்கு எதிராகத் தமிழகத்தில் மீண்டும்எதிர்ப்புக்குரல் எழத் தொடங்கி விட்டதாக 'அறிவிக்கப் படுகிறது.

சென்னையிலிருந்து இரண்டாயிரம் கிலோ மீட்டர் தொலைவில் டில்லியில் உள்ள வட இந்தியர்கள் தென்னிந்தியாவில் அரசியல் ஆதிக்கம் செலுத்துவதற்கு எதிராகத் தமிழ் நாட்டில் உள்ள தீவிரவாத அரசியற் தலைவர்கள் நீண்ட காலமாகப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்தியாவில் தமிழர்கள் குறிப்பிடத்தக்க அந்தஸ்தைப் பெற வேண்டும்- தேசிய ரீதியில் இது நியாயமானதே என்று தமிழகத் தலைவர்களில் ஒருவரான பெருஞ்சித்திரனார் இது பற்றிக் குறிப்பிடுகையில் கூறினார்.

இலங்கையின் வடக்குக், கிழக்கு, மாகாணங்களில் இரண்டு வருடங்களாக நிலைகொண்டிருந்த இந்தியப் படையினரின் அட்டூழியங்கள் பற்றிய புகைப்படக் கண்காட்சி மற்றும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் மாநாடு ஆகியவற்றுக்கு தமிழக அரசு தடைவிதித்ததுடன், தஞ்சாவூரில் இவற்றை நடத்துவதற்கு முற்பட்ட திரு.பி.நெடுமாறன் உட்பட 87 பேர் சில தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது

# மறைந்தஎம்.ஜி.ஆர் நினைவாக தமிழகத்தில் நினைவு இல்லம்

மறைந்த தமிழக முதல்வரும் புரட்சி நடிகருமான எம். ஜி ஆர் நினைவாகத் தமிழகத்தில் ஒரு நினைவு இல்லம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நினைவு இல்லத்திற் புரட்சித்தலைவரின் கார் கைக் கடிகாரம், கண்ணாடி., தொப்பி, சுமார் ஆயிரம் பரிசுப் பொருள்கள், எம். ஜி. ஆர் பயன்படுத்திய உடற் பயிற்சி சாதனங்கள், எடைத் தடடுகள், புத்தகங்கள், ஜெயலலிதா கொடுத்த ஐந்தரை அடி உயரசெங்கோல்.எம்.ஜி. ஆருக்கு தலைவர்கள் எழுதிய கடிதங்கள், எம். ஜி. ஆர் வளர்த்து 'அடிமைப்பெண்' திரைப்படத்தில் நடித்த சிங்கத்தின் பதப்படுத்தப்பட்ட உடல் போன்ற பல்வேறுபட்ட முக்கிய பொருட்கள் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

மேலும் எம்.ஜி.ஆர்.நடித்த படங்களின் ஸ்டில்கள் வரிசையாக வைக்கப்படவிருக்கின்றன.

நினைவு இல்லத்தின் உள்ளே நுழைந்தவுடன் வலது புறம் எம், ஜி. ஆரின் மார்பளவுச் சிலை இருக்கிறது தினமும் குறைந்தது பத்துப் பேராவது அந்தச் சிலைக்கு கற்பூரம் காட்டுகிறார்கள்.

இந் நினைவு இல்லம் திறந்து முதல் மூன்று நாட்களில் மாத்திரம் கிட்டத்தட்ட மூவாயிரம் பேருக்குமேல் இந் நினைவு இல்லம் சென்றுள்ளனர். (9 கி)

ஸ்கொட்லாந்தில்அமைச்சர்கள்ஆராய்கிறார்கள்

# நேட்டோ நாடுகளின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது?

ஸ்கொட்லாந்தில் புதன் கிழமை நேட்டோ வெளிவிவகார அமைச்சகள் அவ்வமைப்பின் எதிர்காலம் குறித்து ஆராயவுள்ளனர். கி. ஐரோப்பாவில் அரசியல் மாற்றங்கள் இடம் பெறும்இவ் வேளையில்நேட்டோ அமைப்பு நாடுகள் தமது எதிர்கால அரசியல்இராணுவப்பங்குகுறித்து ஆராயவுள்ளன.

அதே வேளை இந் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் அணு ஆயுத குறைப்புக்கான நடவடிக்கைகளை ஏற்கனவேஎடுத்துள்ள , 16நாடுகளைக் கொண்ட நோடோ அமைப்பின் வெளிவிவகார அமைச்சர்கள் எதிர்வரும் ஜூலை5-ம் 6-ம்திகதிகளில் கூடி தமது எதிர்காலம் குறித்து ஆராயவுள்ளனர்.

கிழக்கு மேற்கு நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்தவும் அரசியல் ரீதியான பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளக்கூடியதுமான அமைப்பாக நேட்டோ அமைப்பு மாற்றி அமைக்கப் படவுள்ளது. (9)

காஷ்மீர் விவகாரம்;

# பாகிஸ்தானின் தூண்டுதலைதடுக்க இந்தியா கோரிக்கை

காஷ்மீரில் வன்முறை நடவடிக்கையையும் பிரிவினை வாதத்தையும் பாகிஸ்தான் தூண்டிவிடுவதனை கை விடச் செய்விப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமாறு சர்வதேச சமூகத்தை இந்தியா கேட்டுள்ளது.

பாகிஸ்தானின் பொறுப்பற்ற செயல்கள் தெற்காசிய பிராந்தியத்தின் அரசியல் உறுதிப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக கங்கேரி நாட்டின் அதிபரைச் சந்தித்த லோக்சபா சபாநாயகர் திரு. ரவிராய் கூறினார்.

அமைதிப் பேச்சுவார்த்தை மூலம் எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்துக்கொள்ள இந்தியா முயற்சிக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். காஷ்மீர் பிரச்சினைக்கு கட்டுப்படுத்தக்கூடிய அலுவல் வரம்பாக சிம்லா ஒப்பந்தம் உள்ளது என்று கங்கேரி அதிபர் கூறினார்.

சூடானின் வேண்டுகோள்

காஷ்மீர் விவகாரத்தில் நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறும், ராணுவ நடவடிக்கைகள் எதனையும் பெருகிப் பரவாது தடுக்குமாறு இந்தியாவையும் பாகிஸ்தானையும் சூடான் கேட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள நட்புபிணைப்புக்கள் அந்நாடுகளுக்கிடையில் இன்று காணப்படும் பிரச்சனைகளைத் தீர்க்க உதவும் என சூடான் நாட்டு வெளியுறவு அமைச்சு கூறியுள்ளது. (9கி)

## தூக்கில் தொங்கி மரணம்

கொல்லவிளான் குளத்தில் ஆயுர் வேத டாக்டர் ஒருவர் கடந்த ஞாயிறு இரவு தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார், இவர் நெடுந்தீவைச் சேர்ந்தவரெனத் தெரிவிக்கப்பட்டது. (8.கி)

சர்ச்சைக்குரிய மனிதர் சல்மன் ருஷ்தி சொல்கிறார்

# 'மதசார்பற்ற கொள்கைகளின் தோல்வியே காஷ்மீர் பிரிவினைவாத கிளர்ச்சிக்குக் காரணம்'

காஷ்மீரில் பிரிவினை வாத வன்முறைக்கிளர்ச்சி மூண்டதற்குக் காரணம் புதுடில்லி அரசின் மதச்சார்பற்ற கொள்கைகள் தோல்வி கண்டமையே என 'தசேட்டானிக் வேசஸ்' நாவலை எழுதி சர்ச்சைக்குரியவராகக் கருதப்படும் நாவலாசிரியர் சல்மான் ருஷ்தி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மதசார்பற்ற கொள்கைகளுக்கு ஏற்பட்ட தோல்வி தான், காஷ்மீரில் முன்னர் இஸ்லாமிய மரபுவாதத்தை எதிர்த்த பெரும்பான்மை மக்கள் இப்போது அதை நோக்கிக் கவரப்படுவதன் காரணம் காஷ்மீரிகளின் சுயாட்சிக்கான அபிலாசையை நீண்டகாலமாகப் புதுடில்லி அலட்சியம் செய்து வந்ததனால் தான் கிளர்ச்சி ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

'த சேட்டானிக் வேசஸ்' என்ற சர்ச்சைக்குரிய நாவலில் இறை தூதர் முஹம்மதை நிந்தை செய்ததாக உலக முஸ்லிம்களால் குற்றம் சாட்டப்படும் சல்மான் ருஷதி இந்தியாவில் பிறந்தார் ஆனால் இப்போது அவர் பிரிட்டிஷ் பிரஜை. இஸ்லாத்தை நிந்தை செய்ததாக ருஷ்தி மீது ஆத்திரம் கொண்டகாலஞ் சென்ற ஈரானிய ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லா கொமெனி அவருக்கு மரண தண்டனையை விதித்தார்.அதன்பிறகு ருஷ்தி தலைமறைவாகவே இருந்து வருகிறார்.

ஸ்டெயின் நாட்டில் வெளிவரும் பத்திரிகை ஒன்றுக்களித்த பேட்டியில் திரு. ருஷ்தி கூறியதாவது: இந்தியாவின் புதிய பிரதமர் காஷ்மீரிகளின் எதிர்ப்பை சம்பாதித்து இருக்கிறார். காஷமீரிகளின் இந்த எதிர்ப்புணர்வுக்கு முன்னைய காங்கிரஸ் அரசே பெருமளவு காரணம்.

காஷமீர் பாகிஸ்தானுடன் இணைவதை விட சுயாட்சி பெறுவதிலேயே அதிக காஷமீரிகள் அக்கறை காட்டுகின்றார்கள். காஷமீரிகள் வெறியர்கள் அல்லர். காஷ் மீர் பிரச்சனையைத் தீர்க்க இந்தியா விரும்பினால் ஜனநாயகம் அதன் பெறுமதியைக் காட்ட வேண்டும். அது துப்பாக்கி மூலம் காட்டப் படுவதில்லை. (9கி)

## குஜ்ரால் ஈராக் பயணம்

இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் இருதரப்பு மற்றும் பொருளாதார, அரசியல் விவகாரங்கள் சம்பந்தமாக ஈராக் நாட்டுடன் பேச்சுக்கள் நடத்துவதற்காக மூன்று நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

மேற்காசியாவில் தற்போது காணப்படும் நிலைமை குறித்தும் அண்மையில் நடைபெற்ற அரபுக் கூட்டத்தின் பின் விளைவுகள் பற்றியும் திரு. குஜ்ரால் ஈராக்கிய தலைவர்களுடன் கருத்துப்பரிவர்த்தனை செய்துகொள்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. தனது பக்கத்து நாடுகளுடன் இந்தியா உறவுகளை மேம்படுத்திக் கொள்ள மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையும் அவர் இந்தப் பேச்சுக்களில் ஆராயவுள்ளார். (9 கி)

## ஆலயத்தில் திருட்டு

(கீரிமலை)

கீரிமலை கடற்கரை பிள்ளையார் கோவிலில் சில தினங்களுக்கு முன் உண்டியல் திருட்டு இடம் பெற்றுள்ளது.

திருடர்கள் பச்சைத் துவாய் ஒன்றையும்; கத்தி ஒன்றையும் விட்டுச் சென்றுள்ளனர்.

கோயில் கதவு உடைத்தே திருட்டு நடைபெற்றுள்ளது.

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் கீரிமலை சிவன்கோயில் உண்டியலில் திருட்டு இடம் பெற்றதும் குறிப்பிடத் தக்கது. (84கி)

## பதட்டம்

(பூநகரி,

நேற்று நண்பகல் வரை மன்னாரில் இருந்து சங்குப்பிட்டித்துறைக்கு தனியார் பஸ்களோ, போக்குவரத்துச்சபை பஸ்களோ வந்து சேரவில்லை.

மன்னார் செல்வதற்காக வந்த பெருந்தொகையான பிரயாணிகள் சங்குப்பிட்டித் துறையில் காத்துநின்றனர்.

மன்னார் நகர்ப்பகுதியில் வெடிச்சத்தங்கள் கேட்டுக் கொண்டிருப்பதாகவும், ஒரு வாகனங்களும் சேவையில் ஈடுபடவில்ஸலயெனவும் அங்கிருந்து பூநகரிக்கு வந்து சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.(கி)

உலகச் செய்தி விமர்சனம்

# இந்தியப் பிரதமர் வி.பி. சிங் 'வெற்றி'யடைந்து விட்டாரா?

இந்தியப் பிரதமர் வி. பி. சிங் பதவியேற்று! சுமார் 21 வாரங்கள் சென்று விட்டன. ஒரு சிறுபான்மைப் பலமுள்ள அரசாக இவருடைய அரசு பதவியேற்றதால் எந்நேரமும் அரசு கவிழ்ந்து விடும் என்று பலரும் கருதினர் 1977—ல் பதவியேற்ற எதிர்க்கட்சிகள் கூட்டணி எதிர்கொண்ட இன்னல்களை மனதிற்கொண்டே மக்கள் இவ்வாறு கருதினார்கள். உண்மையில் இந்தியாவிலுள்ள எதிர்க்கட்சிகளிடையே காணப்படும் ஒற்றுமையின்மையே இவ்வாறான தன்மைக்குக் காரணம்.இந்திரா காங்கிரசும் இவ்வாறே நினைத்தது. அவாகளின் எண்ணத்துக்குத் தூபம் போடுவதுபோல் சந்திரசேகரும் தேவிலாலும் இயங்கி வந்தார்கள்.

ஆனால் வி.பி.சிங் நிதானத்தை இழக்கவில்லை. இக்கட்டான நிலையிலும் அமைதியுடன் காணப்பட்டார். மக்களுக்கு இவர் மீது நம்பிக்கை வரும்படி நடந்து கொண்டார். பாரதீய ஜனதாக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் இவரை ஆதரிக்கும் வரையில் இவரைக் கவிழ்க்க முடியாது என்பதை இந்தியமக்கள் உணர்ந்தார்கள்.

தேசிய முன்னணி கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை வி.பி.சிங் நிறைவேற்றியிருக்கிறாரா? இவர் இந்தியாவை நேரான பாதையில் செலுத்தும் முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறாரா? என்பது கேள்விக்குறி.

போபஸ் ஊழல் விவகாரம், பஞ்சாப் பிரச்சினை, விவசாயிகளின் கடன்களை இரத்துச் செய்தல் என்று பல விவகாரங்களில் தேசிய முன்னணி வாக்குறுதிகளை அள்ளி வீசியது. வி.பி சிங் பதவியேற்ற தொடக்கத்தில் ஒரு நல்ல மாற்றத்தைக் காணமுடிந்தது

பஞ்சாப் தீவிரவாதிகளை கூடத் தம் வழிக்குக் கொண்டு வர முடியும் என்று கருதிய வி.பி.சிங் திறந்த ஜீப்பில் அமிர்தசரஸ் நகருக்குப் போனதும் அவரை வரவேற்க ஆயிரக்கணக்கான சீக்கியர்கள கூடியதும் மக்களுக்கு நம்பிக்கை அளித்தது. ஆனால் சீக்கியத் தலைவர்களின் பிடிவாதம் அரசுக்குச் சரிப்பட்டு வரவில்லை.

சிம்ரன் ஜித்சிங்மான் பாராளுமன்றத்தில் கூடக் கிர்பான் எனப்படும் கத்தியுடன்தான் நுழைவேன் என்றார். இதை அரசு ஏற்க வில்லை. இதனால் இன்னமும் எம். பியாகச் சத்தியப் பிரமாணம் எடுக்காமல் திரு.மான் உள்ளார். இதனால் மானின் மீது சீக்கியருக்கு அபிமானம் கூடியதுடன் வி.பி.சிங்கின்மீது மக்களின் அபிமானம் குறைந்தது. தற்போது பஞ்சாப் விடயம் உடனடியாகத் தீர்க்கமுடியாதவொன்றாக மாறி விட்டது. இதில் வி.பி.சிங்கிற்குத் தோல்வியே.

இது போன்று அசாம், காஷ்மீர் அரியானா மாநிலங்களில் உள்ள பிரச்சினைகளிலும் வி.பி.சிங் அரசு சுமுகமான முடிவினை எடுக்கமுடியாதுள்ளது.

வி.பி.சிங்கின் ஆட்சியில் ஊழல் என்ற சொல்லுக்கு இடமில்லை என்பது மட்டும் தெளிவு. சட்டமன்றத் தேர்தல்களின் போது இவர் கட்சியினர் தேர்தல் நிதி வசூலிக்கக் கூடாது என்று கட்டளையிட்டிருக்கிறார். பொது மக்களைத் தினமும் சந்தித்து அவர்கள் குறைகேட்டு வருகிறார். அத்துடன் மந்திரிகளும். பொதுமக்களைச் சந்திக்க வேண்டும் என்று விடுத்த வேண்டுகோள் பத்திரிகைகளில் வெளியாகியிருக்கிறது.

பிரதமர் வெளியூர் போகும் போதும் திரும்பி வரும் போதும் விமான நிலையத்துக்கு மந்திரிகள் வரவேண்டாம் என்று கேட்டிருக்கிறார்.

பிரதமர் பாரதீய ஜனதாக் கட்சியின் அச்சுறுத்தலுக்கு அடி பணிந்து செயலற்று நிற்கிறார். இவர் செய்ய முடிந்ததை விட அதிகமாகச் சொல்லி விட்டு விழிக்கிறார். மேலும் ஜனதா தளத்தில் சந்திரசேகரும், தேவிலாலும் இவரைக் கவிழ்த்து விட்டுப் பிரதமர் பதவியைப் பிடிக்கக் காத்திருக்கும் வேளையில், இவர் தோழமைக் கட்சிகள் காலை வாரி விடும் என்று அஞ்சத் தேவையில்லை. சந்திரசேகரை விட, தேவிலாலை விட இவருக்குத் தான் நாட்டில் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது. ஆக வி. பி.சிங்கைக் கவிழ்த்தால் ராஜீவ் காந்தி மீண்டும் பிரதமராகி விடுவார் என்ற எண்ணத்தால் பாரதீய ஜனதாக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் கடைசி வரையில் ஆதரிக்கும் என்பது உறுதி.

ராஜீவ் காந்தி செய்ய முடியாத பல சாதனைகளை வி. பி. சிங் செய்யமுடியும் என்று இந்திய மக்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள். நாட்டின் நலனைக் கருதி வி.பி.சிங் நிமிர்ந்து நிற்க வேண்டும். பாரதீய ஜனதாக் கட்சி, இடது சாரிக்கட்சிகள் ஆகியவற்றின் அச்சுறுத்தலுக்கு அடி பணியாமல் இவர் செயலாற்றினால் தான் இவர் முழுமையான வெற்றியைக் காண முடியும். (9கி)

# கிராமசங்கங்கள் உதவி

பளை அரகினர் வைத்திய சாலை அபிவிருத்திக்கு பச்சிலைப் பள்ளியிலுள்ள முப்பத்தாறு கிராம அபிவிருத்திச் சங்கங்களும் ரூபா ஐந்நூறு வீதம் வழங்கவுள்ளதாக அறியப்படுகின்றது

வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினல் விடுவிக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரமேஇந்நிதி வழங்கப்பட விருப்பதாகவும் அறியப்படுகிறது.(ப.3கி)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் அறிக்கை

# இந்தியப்படை வெளியேற்றப்பட்டதன் பின்னர் அரசு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது

இரண்டரை ஆண்டு காலமாகத் தமிழீழத்தில் நிலை கொண்டிருந்த இந்தியப்படைகளைவிரட்டியடிப்பதற்காக நிபந்தனையற்ற முறையில் பேச்சு வார்த்தை நடாத்த முன் வந்த ஸ்ரீ லங்கா அரசு, இந்தியப் படை வெளியேறியதும் தான் ஒப்புக் கொண்டபடி செயற்படாது தமிழீழப் பகுதிகளில் ஆயுதப் படையினரை குவித்து நடவடிக்கைகளை ஆரம்பித்துமிருக்கிறது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்திலிருந்து விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு;

தமிழீழ விடுதலைப் புலிகளாகிய எமது ஒவ்வொரு நடவடிக்கையும் தமிழ் பேசும் மக்களைப் பாதுகாப்பதற்காகவும், தமிழீழ விடுதலைக்காகவுமே அன்றி வேறல்ல.

தமிழீழ விடுதலைக்காகவும் சிங்கள, இந்திய, ஆயுதப் படைகளின் தாக்குதல்களிலிருந்தும் சமூகவிரோத இனத் துரோகக் கும்பல்களின் துன்டறுத்தல் களிலிருந்தும் தமிழ் பேசும் மக்களைக் காப்பதற்காக இதுவரை 1500 க்கும் மேற்பட்ட எமது இயக்க வீரர்கள் தமது இன்னுயிரை ஈந்துள்ளார்கள் என்பதும் ,ஏராளமான இயக்க வீரர்கள்தத்தில் கை கால்களை இழந்து இயக்க முடியாத நிலைக்குள்ளாகி இருக்கின்றனர் என்பதும் அனைவரும் அறிந்ததாகும்.

இரண்டரை ஆண்டு காலமாக தமிழீழ மக்களுக்கு சொல லொனா கொடுமைகளை இழைத்து தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கிக் கொண்டிருந்த இந்தியப்படையினரை இந்த மண்ணைவிட்டு விரட்டியடிப்பதற்காக ஸ்ரீ லங்கா அரசு நிபந்தனையற்ற முறையில் எம்மைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்த வேளையில் நாம் எமது இலட்சியத்திற்கு எவ்வித ஊறும் நேராத வகையில் எதுவித விட்டுக் கொடுப்புக்களும் அற்ற நிலையில் ஸ்ரீ லங்கா அரசோடு யுத்த நிறுத்தம் செய்து பேச்சு வார்த்தை நடத்த முடிவெடுத்தோம்.

பேச்சு வார்த்தைகளின் போது தமிழ் மக்கள் மீது பகைமை, வெறுப்புணர்வுகளைக் கொண்டுள்ள சிங்கள ராணுவம், தமிழ்ப் பகுதிகளில் இருப்பதில் பயனில்லை என்பதையும், அவர்களினால் தமிழ் பேசும் மக்களுக்கு இன்னலும், இடையூறும் தான் தொடரும் என்பதையும் ஸ்ரீ லங்கா அரசுக்கு தொடர்ந்து இடித்துரைத்து வந்தோம்.

இந்தியப் படையை எப்படியாயினும் வெளியேற்றியே ஆக வேண்டும் என்ற நெருக்கடியான நிலையில், அந்த நேரத்தில், தமிழீழப் பகுதிகளில் இருந்து சிங்களப் பொலிசாரை முற்றாகத் திருப்பி அழைப்பதற்கும், தமிழீழத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் எண்ணிக்கையையும், முகாம்களையும் குறைப்பதற்கும் ஸ்ரீ லங்கா அரசு ஒப்புக் கொண்டதுடன் சில பகுதிகளிலிருந்து சிங்களப் பொலிசாரையும் திரும்பப் பெற்றுள்ளது.

ஆனால் இந்தியப்படை இங்கிருந்து அகற்றப்பட்ட பின்னர் ஸ்ரீ லங்கா அரசு தான் ஒப்புக் கொண்டபடி செயற்படாதது மட்டுமல்ல, தற்போது தமிழீழப் பகுதிகளில் ஆயுதப் படையின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குப் பதிலாக மேலும் மேலும் ஆயிரக்கணக்கான ஆயுதப் படையினரைக் கொண்டு வந்து குவிக்கும் நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றது.

பேச்சு வார்த்தையின் போது ஒப்புக் கொண்டபடி பாராளுமன்றத்தின் மூலம் (2/3 பெரும்பான்மை பலத்தின் மூலம்) எடுக்க வேண்டிய அரசியல் நடவடிக்கைகளை போதிய பெரும்பான்மையின்மையால் ஸ்ரீ லங்கா அரசு மேற்கொள்ள முடியாது தாமதப்படுத்துவதை ஓரளவு பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், தொலைபேசியின் மூலமோ கடிதத்தின் மூலமோ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு செயற்படுத்தக் கூடியதமிழ்ப் பகுதிகளிலிருந்து சிங்களப் பொலிசாரை திருப்பி அழைப்பது போன்ற நடவடிக்கைகளையும்ஸ்ரீலங்கா அரசு மந்தப்படுத்தி, சிங்களப் பொலிசாரை தமிழ் ஈழப் பகுதிகளில் தொடர்ந்து நிலை கொள்ள வைத்திருப்பதானது ஸ்ரீ லங்கா அரசின் உள்ளக் கிடக்கையை நன்கு தெளிவுபடுத்துகிறது. கிழக்குமாகாணத்தில்எமக்கும் சிங்களப் படைகளுக்கும்இடையில்கடந்த 4நாட்களாக நடை பெற்றுவரும் இந்தப் போர் எம்மால் இடையே வலிந்து தொடக்கப்பட்ட தொன்றல்ல கொடுத்த வாக்குறுதிகளை மீறி ஸ்ரீ லங்கா ஆட்சியாளரால் தமிழீழத்தில் திணித்து வைக்கப்பட்டிருந்த சிங்களப் பொலீசாரின் தொடர்ச்சியான ஆத்திரமூட்டல்களினாலும், விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு அவர்கள் இடையூறு விளைவித்ததினாலுமே ஏற்பட்டது.

கடந்த 12. 06. 90 அன்று, யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வருவது பற்றி எம்மோடு பேச்சுவார்த்தை நடத்த ஒருபுறமும்ஸ்ரீலங்காநீதிஅமைச்சர் ஹமீட்டை அனுப்பிய சிங்கள அரசு பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த அதே வேளையில் ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் இன்னொருஅமைச்சர் எமது இயக்கத்தை கிரிமினல்கள் என்று இழித்துரைத்தும், இனத்துரோகியான வரதராஜப்பெருமாளுடன் எமது தலைவரை ஒப்பிட்டும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதிலும் அதையும் பொருட்படுத்தாமல் அமைச்சர் ஹமீட்டுடன் பேசி யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதற்கென முடிவு செய்து நேரமும் குறித்தோம்.

ஆனால், சிங்கள அரசோ அதன்பின் குறிப்பிட்ட நேரத்தில் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதற்குப் பதிலாக யுத்தத்தை தொடர்வதற்கும் அதை விரிவுபடுத்துவதற்குமான நடடிக்கைகளில் வேகமாக இறங்கியிருக்கிறது.

முப்படைகளையும் ஏவிவிட்டு ஆகாய,கடல், தரை மார்க்கமாக தாக்குதல்களை ஸ்ரீலங்கா அரசு தீவிரப்படுத்தியிருக்கின்றது. மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகளில் விமான, ஷெல் தாக்குதல்களினால் பொது மக்களுக்குப் பெரும் உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளது. அம்பாறையில் பல இடங்களில் முகாம்களை விட்டு வெளியேறிய சிங்கள ஆயுதப்படையினர் பல தமிழ் முஸலிம் பெண்களை பாலியல் வன்முறைக்குள்ளாகியிருப்பதுடன், நூற்றுக்கும் அதிகமான மக்களை வெட்டிக் கொன்றுள்ளனர்.

மேலும் மூவாயிரத்துக்கும் அதிகமான ஆயுதப் படையினரைக் கொழும்பில் இருந்து ஸ்ரீ லங்கா அரசு கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

தமிழீழ மக்கள் மீது பெரும் தாக்குதலை நடத்தி வரும் ஸ்ரீ லங்கா அரசின் ஆயுதப் படையினருக் கெதிராகக் கடந்த 4 நாட்களாக நடைபெற்ற யுத்தத்தில் எமது 45 வீரர்கள் களப் பலியாகியுள்ளனர்.

தமிழீழ மக்களின் விடுதலைக்கான வேள்வித் தீயில் தம்மை அவித்துக் கொண்ட அந்த 45 வீரர்களுக்கும் நாம் எமது வீர வணக்கத்தைச் செலுத்துகின்றோம். ஸ்ரீ லங்கா ஆயுதப்படையின் அடக்கு முறைகளுக்கு எதிராகத் தொடர்ந்தும் எமது போராட்டத்தை நடத்துவதற்கு உறுதி பூண்டுள்ளோம்.

தமிழீழ மக்களுக்காக நாம் நடத்திவரும் போரில் பார்வையாளராக இருந்து எம்மைப் பாராட்டுவதையோ, விமர்சனம் செய்வதையோ விட்டு விட்டுத் தமிழீழமக்கள் அனைவரும் பங்காளிகளாக மாறிக் களத்தில் நிற்கும் எம்முடன் இணைந்து செயற்படுமாறு வேண்டுகின்றோம், இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இயற்கை...

அடிக்கடி செல்வேன். என்னாலான உதவிகளை எனது நாட்டிலிருந்து பெற்றுக் கொடுத்துள்ளேன். முன்னர் ஒரு நாளுக்கு அரை மணி நேரம் மட்டும்தான் குடிநீர் வசதி கிடைத்தது. அங்கு ஒழுங்காக நீர்வசதி கிடைப்பதற்கு 50 ஆயிரம் ரூபா செலவில் நீர்த்தாங்கிகளை அமைத்துக் கொடுத்துள்ளோம். குழாய்களை பூரணமாகத் திருத்திக் கொடுத்துள்ளோம். இப்போது அவர்களுக்கு 24 மணி நேரமும் நீர்வசதி கிடைக்கின்றது. அத்துடன் பிள்ளைகளுக்கு விளையாட்டு அரங்கு ஒன்றையும் அமைத்துக் கொடுத்துள்ளோம்.

என் வாழ்நாளில் மாந்தீவை என்னால் மறக்க முடியாது. அவர்களுக்கு தொடர்ந்து பணிபுரிய வேண்டும் என்றுதான் என் மனம் துடிக்கின்றது. ஆனால் எனது நாட்டுக்குச் சென்று எனக்காகவும் உழைக்க வேண்டும் அல்லவா? நான் கம்போடியா எல்லையில் அகதியாக இருந்த மக்களுக்கு வைத்திய சேவை செய்திருக்கின்றேன். அங்கு பெற்ற அனுபவங்களைவிட இங்கு அதிக அனுபவங்களைப் பெற்றுக் கொண்டேன்.

இந்தியப்படை, தமிழ் தேசிய இராணுவம், தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோரை எமது சேவைக் காலத்தில் சந்தித்துள்ளேன். இது எனக்குப் புதுமையான அனுபவங்களைக் கொடுத்தது ஒரு பார்வையாளராக. ஒரு நாடு பரிணாமத்துக்குள்ளாவதை அனுபவபூர்வமாகக் கண்டேன்.

இந்தியப்படையின் காலத்தில் நாங்கள் அடிக்கடி சோதனைக்குட் படுத்தப்பட்டோம். ''சென்றிகளில்'' எமது வாகனம் சோதனைக்குட்படுத்தப்படும். இது போன்று பல கஷ்டங்களை அனுபவித்தோம்.

தமிழ் தேசிய இராணுவம் வைத்தியசாலையில் நித்தமும் ஆயுதங்களுடன் காணப்பட்டதால் எமக்குப் பல அசௌகரியங்கள்ஏற்பட்டன. கட்டுப்பாடுகளையும் மீறி ஆயுதத்துடன் வைத்தியசாலைக்குள் நுழைந்து நோயாளர்களுக்கு தொல்லை கொடுத்தனர். எமது வாகனத்தைத் தரும்படி தினமும் தொல்லை கொடுத்தனர்.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் எம்முடன் மிகவும் கண்ணியமாக நடக்கின்றனர். வாகனம் கேட்கக் கூடாது. ஆயுதத்துடன் வைத்தியசாலைக்குள் வரக்கூடாது என்ற எமது நிபந்தனைகளை மதித்துப் புலிகள் செயற்படுகின்றனர்.

அவர்களின் கட்டுப்பாடும், ஒழுக்கமும் என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது. நிர்வாகத்திற்கு அவர்கள் எந்த விதத்திலும் தொல்லை கொடுத்ததில்லை எனக் குறிப்பிட்ட டாக்டர் வின்சன்ட் ஆனிடம் இந்நாட்டின் அரசியல் எதிர்காலம் பற்றி என்ன நினைக்கிறீர்கள் எனக் கேட்டபோது அவர் சொன்னார்,

அரசியல்பற்றி நான் எதையும் குறிப்பிடவிரும்பவில்லை. ஆனால் இந்நாட்டின் நிலை ஸ்திரமானதாக இல்லை. அடுத்த ஒருசில மாதங்களுக்குள் என்ன நடக்குமோ? எதிர்காலம் எப்படி அமையுமோ எனக் கவலைப்படுகிறேன். எந்தப் பக்கம் வெற்றி கிடைக்கும்? எப்படித் திசை திரும்பும் என்று யாராலும் கூற முடியாதுள்ளது.

இந்த மண்ணில் சமாதானம் வரவேண்டும். சமாதானம் வந்து தமிழ் மக்கள் நிம்மதியாக வாழவேண்டும், வெளிநாடுகளிலுள்ள தமிழ் டாக்டர்கள் மீண்டும் இங்கு வந்து கடமை புரிய வேண்டும் என பிரார்த்தனை செய்கின்றேன்.

தமிழ் மக்களுக்கு அதிர்ஷ்டம் கிடைக்க வேண்டும் என வேண்டுகிறேன் எனக் குறிப்பிட்டார்.

பிரான்ஸ் நாட்டில் அகதிகளாக வந்திருக்கும் தமிழர்கள் எப்படி அம்மக்களுடன் நடந்து கொள்கிறார்கள் அவர்கள் பற்றி பிரான்ஸ் நாட்டு மக்கள் என்ன நினைக்கிறார்கள் எனக் கேட்ட போது...

இலங்கையின் டிப்ளோமா பட்டங்கள் எதுவும் பிரான்ஸ் நாட்டில் செல்லுபடியாகாது. அதனால் இங்கு டாக்டராகவோ, எஞ்சினியராகவோ, கணக்காளராகவோ பட்டம் பெற்று தொழில் பார்த்தவர்கள் அங்கு வந்து அதே தொழிலைச் செய்யமுடியாது. அதனால் பலர் அங்கு கஷ்டப்படுவதை நான் அறிந்தேன். மற்றும்படி அங்குள்ள தமிழ் மக்கள் பற்றி அதிகம் தெரியாது.

கடந்த 9 மாதங்களில் மொழிப்பிரச்சினை உங்களுக்கு ஏதாவது தடையாக இருந்ததா எனக் கேட்ட போது...

நேரடியாக நோயாளிகளிடம் கதைத்தால்தான் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும். அதனால் சில தமிழ் வார்த்தைகளை நான் அறிந்து வைத்திருக்கின்றேன். 'எப்படி இப்போது சுகமா? பிள்ளை பால் குடிக்கிறதா? சாப்பிட்டீர்களா? நோ இருக்கிறதா? இப்படி சில வார்த்தைகளை தமிழில் பேசினால் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது.

தமிழ்மொழி பேசுவது கஷ்டம் என நான் நினைக்கவில்லை. இன்னும் சிறிது காலம் இருந்தால் ஓரளவு தமிழைப் பேசுவேன் என்ற அவர் தமிழ் கலாசாரம் என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது என்றார்.

'சாறி உடுத்துக்கொண்டு கோவிலுக்குப் போவதில் எனக்கு அலாதி பிரியம் என்றார்.

இறுதியாக உங்கள் மனதை நெருடிக்கொண்டிருக்கும் சம்பவம் ஏதாவது உண்டா எனக் கேட்டபோது ...... ... கவலை தோய்ந்த முகத்துடன் அவர் சொன்னார்.

நான் இங்கு பிரியாவிடை பெற்றுச் செல்கின்றேன். எனக்கு இங்கு தாதிமார், சிற்றூழியர்கள் உருக்கமான பிரியாவிடை வைபவங்களை நடாத்தி கௌரவித்தனர். அவர்களின் அன்பை என்னால் மறக்க முடியாது. நாளைய பொழுது விடிந்தால் நான் புறப்பட்டு விடுவேன்.

ஆனால் இதுவரை இங்குள்ள சுகாதார திணைக்களத்தின் எந்த ஒரு உயர் அதிகாரியோ, உள்ளூர் டாக்டர்களோ 'நன்றி போய் வாருங்கள்' (GOOD BYE) என்று ஒரு வார்த்தைதானும் கூறவில்லை. அது என்மனதை அரிக்கிறது. இருந்தாலும் பரவாயில்லை.

மட்டக்களப்பு மக்களின் அன்பை என்றும் மறவேன். அவர்கள் மிகவும் நல்லவர்கள் இனியவர்கள். அவர்களுக்கு சுபீட்சமான எதிர்காலத்தை இறைவன் கொடுக்க வேண்டும் எனக்கூறிய பிரான்ஸ் டாக்டர் செல்வி (டாக்டர்) வின்சன்ட் ஆனிடம் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டு விடை பெற்றேன்.

யாழ்ப்பாண திறந்த

## பலகலைககழக வளர்ச்சிக்கு தொழில்நுட்பக் கல்லூரி உதவும்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் கட்டிட வேலைகள் பூர்த்தியாகும் சந்தர்ப்பத்தில் 35 வீதமான மாணவர்களுக்கு மேலதிகமாக கல்வி கற்கும் வசதியை ஏற்படுத்தலாம் என கல்லூரி அதிபர் சி. இராஜேந்திரா தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் தொழில் நுட்பக்கல்லூரி மாணவருக்கும் மகாபொல கொடுப்பதற்கு தொழில் நுட்பக்கல்விப்பணிப்பாளர் டபிள் யூ சமரசிங்காவிடம் கேட்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார். உயர் தொழில் நுட்பத் தேசிய டிப்புளோமா பயிற்சி நெறியை ஆரம்பிப்பதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகவேலை வாய்ப்பை பெறமுடியும் என்றார்.

யாழ் திறந்த பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு தொழில் நுட்பக் கல்லூரி தன்னால் இயன்றவற்றை பகிர்ந்து கொள்ளும் என்றார்.

## திருநிலைப்படுத்தல் சடங்கு

(உருத்திரபுரம்)

அருட்சகோதரர் மனுவல் சவரிமுத்துகுருவானவராகதிருநிலைப் படுத்தப்படவுள்ளார் இவருக்கான பட்டமளிப்பு30ம் திகதி சனிக்கிழமை, பி. பகல் 4 மணிக்கு நீர்கொழும்பு கொச்சிக்கடையில்உள்ள தூய ஆவியானவர் ஆலயத்தில் கொழும்பு ஆயர் மேதகு ஒஸ்வாட் ஆண்டகையால் நிகழ்த்தப்படவுள்ளது.

திருப்பலிப்பூசை நெடுந்தீவு புனித யூவானியார் தேவாலயத்தில் யூலை 7ம் திகதி புதன் கிழமையில் மாலை 5. 00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

(ப-6கி)

சட்டம் தயாராகிறது

# அரசகருமமொழிச் சட்டத்தை மீறின் 3 மாதகடூழியச் சிறைத் தண்டனை

அரச கரும மொழிச் சட்டம் அமுலாவதை கண்காணிப்பதற்கென அரச கருமமொழிகள் ஆணைக்குழுவொன்று விரைவில் அமைக்கப்படும்.

இதற்கான சட்வரைவு தற்போது சட்டவரைஞரால் வரையப்பட்டு வருகிறது.

அதன்படி அரச கருமமொழிச் சட்டத்தை மீறுவோருக்கு 3 மாத கடூழியச் சிறைத் தண்டனை அல்லது 1,000 ரூபா அபராதம் விதிக்கப்படும்.

முதலில் அரசாங்க அதிகாரிகளுக்கு மொழிப் பயிற்சி வழங்குவதற்கே இந்தப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது, இதன் கீழ் நாளொன்றில் ஒரு மணித்தியாலம் தமிழும் ஒரு மணித்தியாலம் ஆங்கிலமும் போதிக்கப்படும் வடக்கு கிழக்கில் இது போல் சிங்களமும் ஆங்கிலமும் போதிக்கப்படும்.

ஒரு வருடத்திற்குள் 108 மணித்தியாலங்கள் இவ்வாறு பிற மொழி போதிக்கப்படும் இறுதியில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடைவோருக்கு ரூபா 500 கொடுப்பனவும் சான்றிதழும் வழங்கப்படும்.

10 வகுப்புக்களைச் கொண்ட இப் பாடத்திட்டத்தில் 10 வகுப்புக்களிலும் பரீட்சை நடத்தி' சித்தியடைவோரின் சம்பளம் 150 ரூபாவால் அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7கி)

## புதிய பெற்றோலியம் குதம் காங்கேசனில் அமையும்

இலங்கை பெற்றோலியக் கூட்டுதாபனத்தின் குதமொன்று காங்கேசன் துறை லங்கா சீமெந்துநிறுவனத்தின துறைமுகப் பகுதியில் அமைக்கப் படவுள்ளது,

இதற்கானகாணியை லங்கா சீமெந்து நிறுவனம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியுள்ளது.

துறைமுகத்தை அண்மித்த பகுதியில் பெற்றோலியக் கூட்டுதாபனத்தின் குதம் அமைக்கப்படவிருப்பதால் கடல் மார்க்கமாக எரிபொருளை கொண்டு வந்து நிரப்புவதற்கு வசதியாக அமையும் என கூறப்பட்டுள்ளது,

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, (7கி)

## மஹோற்சவம்

(உடுவில்)

பொலிகண்டி கந்தவனக் கடவை ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மஹோற்சவம் 23-ந் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 6-ந் திகதி தேர்த்திருவிழாவும் 7-ந் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ப-2)

## மின் விநியோகம் கிடைக்கும்

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளான மணியந்தோட்டம், அரியாலைப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான அபிவிருத்தி வேலைகளை யாழ். மாவட்ட மின்சார சபை துரிதமாக மேற்கொண்டுவருகிறது. (4, 7 கி)

## மருதங்கேணியில் உரக்களஞ்சியம்

(முள்ளியான்)

இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் முடிவடைவதற்கு முன்னர் மருதங்கேணியில் உரக்களஞ்சியம் ஒன்று அமைக்கப்படும்.

இத்தகவலை யாழ் மாவட்ட கமநலச் சேவைத் திணைக்கள ஆணையாளர் க. சிவசாமி தெரிவித்தார்.

தற்சமயம் ஒரு தற்காலிக கட்டிடத்திலேயே இந்த உரக்களஞ்சியம் இயங்குகிறது.

இவ் வுரக்களஞ்சியம் அமைக்கப்படுவதன்மூலம்வடமராட்சி கிழக்கில் உள்ள விவசாயிகள் நன்மையடைய வாய்ப்புக்கள் உண்டு எனவும் அவர் குறிப்பிட்டார். (43கி)

## வவுனியா இந்துமாமன்றப் பொதுக்கூட்டம்

வவுனியா இந்துமாமன்றப் பொதுக்கூட்டம் 9ம் திகதி சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இக்கூட்டத்தில் போஷகர்களும் புதியநிர்வாக சபையினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

வவுனியா கந்தசாமி கோயில் பிரம்மஸ்ரீ இ. பாலச்சந்திரக் குருக்களும் வை.செ. தேவராசாவும் போஷகர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இம்மன்றத்தின் தலைவராக டாக்டர் க. பாலசிங்கமும் பொதுச் செயலாளராக ச. புஷ்பராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

வவுனியாகுடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயக் குருக்களின் உரையுடன் கூட்டம் நிறைவுற்றது. (கி)

## களஞ்சியத்தில் கழிவு மா

மாங்குளம் பண்டகசாலையில் நீண்டநாட்களாக பெருந்தொகையான கழிவுமா இருப்பில் இருக்கிறது. இந்தக் கழிவு மாவை கால்நடை உணவுத்தீனிக்கு அனுப்பி வைக்கும்படி பொதுமக்கள் கேட்டுள்ளனர். இதுவரையில் இதற்கான நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. (8கி)

## சுவையான செய்திகள்

### நிர்வாணத்துக்கு காரணம் இது

வாஜாஸ் இசிங்கே என்பவன் பூடாபெஸ்ட் நகர வீதியில் நிர்வாணமாகத் தோன்றியதற்காகக் கைது செய்யப்பட்டான். தொழிலில் பெரும் நஷ்டம் அடைந்ததால் ஒரே உடையைத் தவிர அனைத்தையும் விற்றுவிட்டேன். எனக்கிருந்த அந்த ஓர் உடையும் அழுக்காகிவிட்டதால் லோண்ரியில் வெளுக்கப் போட்டேன். அதை வாங்குவதற்காகவே ஆடையற்ற நிர்வாண நிலையில் தெருவுக்கு வர நேரிட்டது என்று கோர்ட்டில் கண்ணீர் மல்கக் கூறி மன்னிப்புக் கோரினான். கோர்ட்டாவது ஒப்புக்கொள்வதாவது! (74)

### இரத்தத்தினால் எழுதியும்....

பிரான்ஸ் நாட்டின் அரசன் டியூக் ஹென்றி டிகைஸ் தன் காதலி ஆனி-த-கான்ஸா என்பவளுக்காக மாதம் ஒரு கடிதம் வீதம் 12 கடிதங்கள் எழுதி அனுப்பினான். எப்படித் தெரியுமா? தன்னுடைய இரத்தத்தினால் 'உன்னையே மணப்பேன்' என்று எழுதிய 12 கடிதங்களையும் தூதுவன் மூலம் காதலியிடம் சேர்த்தான். காதலியின் சம்மதம் கிடைத்தது. ஆனால் மணந்தானா? அதுதான் இல்லை. அவளை மணக்காமல் இனொரு பெண்ணை மணந்துகொண்டான்... போலிக் காதலன்.

### ஆட்டு மந்தைகள் போர்

ஆட்டு மந்தைகள் போரில் வெல்ல முடியுமா? ஸ்விச்சலாந்தின் க்ருயெர் நகரை பெர்னீஸ் படை ஒரு முறை சூழ்ந்து கொண்டது. நகரில் இருந்த ஆண்கள் அனைவரும் வேறு ஓர் இடத்திற்குப் போரிடச் சென்றிருந்தார்கள். ஆனால் க்ருயெர் நகரப் பெண்கள் அஞ்சவில்லை ஊரில் உள்ள ஆடுகள் அனைத்தையும் தயார் செய்தார்கள். ஒவ்வோர் ஆட்டின் தலையிலும் எரியும் தீப்பந்தம் ஒன்றைக் கட்டி எதிரிப்படையினரை நோக்கி அனுப்பினார்கள். பேய் பிசாசுகளே போருக்கு வந்து விட்டனவா என்று அஞ்சிய பெர்னீஸ் படை பயந்து நகரை விட்டு ஓடியே விட்டது. (77)

### ஆண்களுக்கு வந்த கோபம்

வடக்கு அயர்லாந்தில் 300க்கும் மேற்பட்ட பெண் பொலிசார் பிரிட்டனில் மிக உயர்ந்த விருதான 'செக்ஸ டிஸ்கிரிமினேஷன்' என்ற விருதைப் பெற்றிருக்கிறார்கள்.

ஆண்காவலர்களை விடச் சிறப்பாக பணி புரிந்தமைக்காக இந்த விருது வழங்கப் பட்டது. எப்படிப் பெண் பொலிசுக்கு இந்த விருதை வழங்கலாம் என 310 பொலிஸ் அதிகாரிகள் தங்களுக்குப் பதவியுயர்வு தேவையில்லை என ஒதுக்கித் தள்ளி விட்டார்கள் அங்கேயும் ஆண்களின் குணம் மாறவில்லை. (77)

## முரசொலிக்கு வந்த கடிதம்

### கிராமங்கள் புத்துயிர் பெற இந்திர விழாக்கள் உதவுமா?

ஆசிரியர்
முரசொலி

எமது பொருளாதாரம் இவ்வளவு சீர்கெட்டும் அழிந்து போயும் உள்ள இவ்வேளையில் சில ஆலயங்களில் 'இந்திர விழா' என விழாவை வைத்து வீண் செலவு செய்கிறார்கள்.

அப்பணத்தைக் கொண்டு அழிவுற்றிருக்கும் அக்கிராமத்தையே இந்திர நகரமாக்கலாம் ஏன் நாம் அரசாங்கத்தை எதிர்பார்த்து காலத்தை வீணாக்காமல் எம் பணத்தைக் கொண்டு நாமே எமது நாட்டை வளம்படுத்தலாம் தானே?

இனியாவது ஆலயநிர்வாகிகள் இவ்வாறான வீண் செலவுகளிற்கு இடம் அளிக்காமல் அப்பணத்தை நல்ல முறையில் பயன்படுத்த முயலவேண்டும்.

யாழ்ப்பாணம் — எஸ். கார்த்திகேசு

### நீங்கள் சின்னஞ் சிறார்கள்தான்; என்றாலும் கொஞ்சம்...

ஆசிரியர்
முரசொலி

தற்போது யாழ் நகர வீதிகளில் சைக்கிளில் பவனிவரும் மாணவரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது. பாடசாலை விட்டும் ரீயூசன் வகுப்புகள் முடிந்தும் செல்லும் மாணவர்கள் வீதிகளில் சமாந்தரமாக சைக்கிளில் செல்வதை பரவலாகக் காணலாம்.

இதனால் இவர்கள் ஏனைய வாகனங்களுக்கு தாம் இடையூறு விளைவிப்பதை நினைப்பதில்லை.

இதனால் வீதி விபத்துக்கள் பல இலகுவில் இடம்பெற இவர்கள் காரணமாகின்றார்கள்.

வீதியில் செல்லும்போது தமக்குள் உரக்கப் பேசிச் சிரிப்பதால் கவனங்கள் திசைதிரும்பி விபத்துகள் நடைபெற ஏதுவாகின்றது. எனவே மாணவ மாணவிகள் இவற்றைச் சிந்தித்துஇனியாவது திருந்தி நடக்க வேணடும்.

திருமதி. மணிமேகலை குமாரசாமி

பிரிட்டனிலிருந்து

## யாழ். பல்கலைக்கழகத்திற்கு ஆய்வுகூட உபகரணங்கள்

பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனம் யாழ் பல்கலைக்கழகத்திற்கென நான்கு கோடி ரூபா பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்களைப் புனர்நிர்மாண அடிப்படையில் வழங்கஇருக்கின்றது

இவ் உபகரணங்களில் நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியானவை கம்பியூட்டர் உபகரணங்கள்.

இவை உட்பட அனைத்து உபகரணங்களும் அடுத்தமாத நடுப்பகுதில் யாழ். பல்கலைக்கழகத்தை வந்து சேரலாம் என எதிர்பாக்கப் படுவதாகவுந் தெரிவிக்கப்பட்டது.(4.கி)

## புதுக்குளம் விளையாட்டு விழா; வெற்றி பெற்றோர் விபரம்

### இனிப்போட்டம் பாலர்பிரிவு (பெண்)

1-ம் இடம்:- செல்வி பஞ்சாட்சரம் தமிழரசி, புதுக்குளம், சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா.

2-ம் இடம்;- செல்வி செ. தீபனா, சாஸ்த்திரி கூழாங்குளம், வவுனியா.

3-ம் இடம்;- செல்வி க. நிசாந்தினி, புதுக்குளம், சாஸ்த்திரி கூழாங்குளம், வவுனியா.

### உத்தியோகத்தர்களுக்கான200மீற்றர்ஓட்டம்

1-ம் இடம்:- S. M. சகாப்தீன், பட்டாகரிச்சி புளியங்குளம், வவுனியா.

2-ம் இடம்;- V. S. ஆனந்தன், புதுக்குளம், சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா.

3-ம் இடம்;- சு. வேதநாயகம், புதுக்குளம், சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா.

### சுருட்டுப் பற்ற வைத்தல்

1-ம் இடம்:- வே. சின்னராசா, கோதண்டர் நொச்சிக்குளம், வவுனியா.

2-ம் இடம்;-P.செல்லையா சமளங்குளம், வவுனியா.

3-ம் இடம்;- V. பாலகிருஷ்ணன், மருக்காரம்பளை, வவுனியா.

### மரதன் ஓட்டம் ஆண்கள்

1-ம் இடம்;- சியாம்சுந்தர் தாண்டிக்குளம், வவுனியா.

2-ம் இடம்:- R, இராமகிருஷ்ணன், வவுனியா.

3-ம் இடம்:- திருஞானம் வவுனியா.


### வினோத உடை

1-ம் இடம்;- ராமமூர்த்தி (கைதி)
2-ம் இடம்:-பருத்தித்துறை ஐக்கிய வி. கழகம்(இராவணும்)
3-ம் இடம்:- ம. சுபாஜினி (விசரி)

கிளிநொச்சிச் சம்பவத்தில் உயிர் தப்பியவர் சாட்சியம்

# பொம்பர் வீசிய குண்டு பட்டதும் அண்ணர் ஸ்தலத்திலேயே பலியானார்

கிளிநொச்சியில் நேற்றுமுன் தினம் அதிகாலை இடம் பெற்ற விடுதலைப்புலிகள் இன்றிஉயரத்தில்குண்டைவீசி விட்டு சென்றது. குண்டு போடப்பட்டதை நானும் விழுந்து வெடித்தது...... அப்போது தான் நாம் குண்டு வீசப்பட்டதை உணர்ந்தோம். ஆனால் அந்த உணர்வு அவ்வளவு தான் அண்ணாவின் உடலைக் கூட என்னால் காணமுடியவில்லை.



மாணவர் கிருஷ்ணகாந்தன்

விஸ்ணுகாந்தன் (24வயது) என்ற கிளிநொச்சி நீர்ப்பாசன தொழில் நுட்ப உத்தியோகஸ்தரே மேற்படி மரணத்தை தழுவியவராவர் இவர்களுடன் கிளிநொச்சி வர்த்தகர்களான எஸ். சிங்கராஜா (27) கு. ராமசந்திரன் (43) ஆகியோரும் இச்சம்பவத்தில் காயமடைந்தனர்.

இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டு ஓடும் போது ஒரு காலின் பாதத்தை இழந்த கிளிநொச்சி பொலிஸ் நிலைய சார்ஜண்ட் எம். நடராஜா தன் கதையைக் கூறுகையில்:-

''தாக்குதல் ஆரம்பித்து சிறிது நேரத்தில் புலிகள் பொலிஸ் நிலையத்தை வந்தடைந்தனர். எம்மைத் தப்பியோடும் வண்ணம் சைகை கொடுத்தார்கள். வெடிச் சத்தங்கள் சரமாரியாகக் கேட்க நாம் உயிரைக் கையில் பிடித்த வண்ணம் தப்பி ஓடினோம். அப்போது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் எனது பாதம் சிதறியது. சிறிது தூரம் நொண்டியபடி வந்து... உயிரைக் காப்பாற்றி விட்டேன். (3-கி)

இராணுவத்தினர் நேரடி மோதல் சம்பவத்தில் காயமடைந்தசிலரையாழ் போதனா வைத்தியசாலையில் சந்தித்த போது...


பொம்பர் தாக்குதலின் போது சொந்த சகோதரனை இழந்து படுகாயமடைந்த உருத்திரபுரம் இந்து மகாவித்தியாலய மாணவன் கிருஷ்ணகாந்தன் (வயது 20) தன் உணர்வுகளை வெளிப்படுத்தியபோது.

'அதிகாலைத் தாக்குதல் முடிந்து விட்டது என்று எண்ணி நானும் என் அண்ணாவும் சைக்கிளில் கிளிநொச்சி கந்தசாமி கோயிலுக்கு வந்தோம்.

அப்போது மீண்டும் பொம்பர் தாக்குதல் ஆரம்பித்தது நாம் பயந்து சைக்கிளை விட்டு விட்டு ஒரு மரத்தின் கீழ் குப்புறப் படுத்து விட்டோம். ஒருமுறை ... இருமுறை ... இரு தடவையும் பொம்பர் நாம் படுத்திருந்த பகுதியில் குண்டு வீசவில்லை,

முன்றாம் முறையாக பொம்பர் வந்த போது சிறிது துணிவுடன் எழுந்து நின்றோம். அப்போது எமக்கு மேலாகசென்ற பொம்பர் எவ்வித சத்தமும் காணவில்லை எம்முடன் இருந்த வேறுஇருவரும் காணவில்லை.

வீசப்பட்டகுண்டு எனது அண்ணாவின் தலையின் மேல்



பொலிஸ் சார்ஜண்ட் எம். நடராசா

# கிளிநொச்சி வெறிச்சோடிய நிலையில்; மக்கள் பூநகரியில் பெருமளவில் தஞ்சம்

(பூநகரி)

கிளிநொச்சி இராணுவ முகாமில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்துகிளிநொச்சி நகரம் வெறிச்சோடிக் காட்சியளிக்கிறது

அரசினர் வைத்திய சாலையில் தங்கியிருந்த சகலநோயாளர்களும் வெளியேறியுள்ளனர். பதட்டநிலை தொடங்கியிருப்பதால் நகர்ப்பகுதியில் இருந்து வெளியேறிய ஆயிரக்கணக்கான மக்கள் பூநகரிப் பகுதியில் உள்ள வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

பெரும்பாலானோர் மினிவான்களிலும், சைக்கிள்களிலும் பூநகரி கேரதீவு துறையூடாக யாழ் குடா நாட்டை நோக்கி வந்த வண்ணமிருக்கின்றனர். தொடர்ச்சியாக வரும் வாகனங்களையும், மக்களையும் மறு கரைக்குச் சேர்க்கும் சேவையில் நேற்றுக் காலை தொடக்கம் இரவு பூராவும் தொடர்ச்சியாக இருபத்திநாலு மணி நேரமும் இரு பாதைகளும் அங்குள்ள ஊழியர்களும் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து வர்த்தக தனியார் பஸ்களும், முல்லைத்தீவு போக்குவரத்துச் சபை, தனியார் பஸ்களும் கேரதீவு ஊடாக பாதையில் ஏற்றப்பட்டு அனுப்பப்பட்டு வருகின்றன.

கொழும்பிலிருந்து பொருள்களுடன் வந்த இருபத்தைந்துக்கு மேற்பட்ட லொறிகள் பாரத்துடன் வள்ளத்தில் ஏற்ற முடியாத படியால் திருப்பிச் சென்று பூநகரிப் பகுதியில் பல இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. (கி)

# வடம.கிழக்கு மீனவர் மீது கடற்படையினர் தாக்குதல்

வடமராட்சி கிழக்குப்பகுதி நாகர்கோயில் செம்பியன் பற்று ஆழியவளை மீனவர்கள் கடந்த சில தினங்களாக கடற்படையினரால் அச்சுறுத்தப்பட்டும் தாக்கப்பட்டும் வருவதாகப்புகார்தெரிவிக்கப் படுகிறது.

நேற்று முன்தினம் நாகர் கோவிலிலிருந்து மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்ட பின்னர் அன்று மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

கடற்படையினரின் இந்த நடவடிக்கைகளால் மீனவர்கள் மத்தியில் சச்சரவும் பதற்றமும் எழுந்துள்ளது. (4கி)

# வவுனியா இணக்கசபையினால் வழக்குகள் விசாரணை

வவுனியா நகரம் இணக்க சபை பிரதி ஞாயிற்றுக்கிழமை சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் கூடி பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் வழக்குகளை விசாரித்து நீதியான தீர்ப்புக்களை வழங்கி வருகின்றது.

நீதிமன்றம் இயங்காததினால் அதன் பணிகளை இந்த இணக்கசபை செய்துவருகின்றது என சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர். (11கி)

யாழ் பல்கலைக்கழகம்

# ஜூலை 23ல் திறக்கப்படும்; ஆகஸ்டில் புதிய மாணவர் அனுமதி

யாழ் பல்கலைக் கழகத்தின் 1989ம் ஆண்டுக்கான சகல பரீட்சைகளும் 16ம் திகதியுடன் முடிவடைகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் மாணவர்களுக்கு படிப்பு விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது. விரிவுரைகள் நடைபெறவில்லை.

மீண்டும் 90ம் 91ம் கல்வியாண்டுக்காக எதிர்வரும் யூலை மாதம் 23ம் திகதிதிறக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் புதிய மாணவர்களுக்கான கல்வியாண்டு ஆரம்பிக்கப் படவுள்ளது. (ப-11கி)

# பனைவள விஸ்தரிப்பு ஊழியராக 40 பேர் புதிதாக நியமனம்

வடக்கு-கிழக்கில் உள்ள பனை வளத்தை பெருக்கும் நோக்கில் புதிதாக விஸ்தரிப்பு உத்தியோகத்தர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனம் கடந்த வாரம் வழங்கப்பட்டது. புதிதாக 40 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது.

இவர்கள் யாழ்பபாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்கட்கு தற்போது சேவையில் ஈடுபட்டு உள்ளனர். (ப-15 கி)

# வேடர் தலைவனை பிரேமா சந்திக்கிறார்

வேடுவர் தலைவரை ஜனாதிபதி சந்திக்கவுள்ளார். வேடுவர் தலைவர் திரு. திசகாமியும் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸவும் இன்று 16-ம் திகதி கண்டியில் சந்தித்துப் பேசவுள்ளனர். இச்சந்திப்பில் வேடர்களின் பாரம்பரியத் தாயகமான தம்பன்னவின் சட்டரீதியான சர்ச்சைக்குரிய விவகாரங்கள் ஆராயப் படவுள்ளன. ஜனாதிபதி திசகாமியை அவருடைய வழக்கறிஞருடன் சந்திக்கவுள்ளதாக ஜனாதிபதி செயலக அறிக்கை கூறுகின்றது, (ஸ்ரீ)

கொடிகாமத்தில்

# கலை, கலாசாரப் பிரிவின் இரண்டாவது தடாக விழா

(நாவற்குழி)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலைகலாசாரப் பிரிவு வழங்கும் இரண்டாவது தடாகவிழா இம் மாதம் 17ம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கொடிகாமம் வட்டப் பொறுப்பாளர் ராகுலன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவை தென்மராட்சி கலைகலா சாரப் பொறுப்பாளர் ஏ. வி, உலகநாதன் அறிமுகம் செய்து வைப்பார்.

இவ் விழாவில் தென்மராட்சிப் பொறுப்பாளர் தினேஸ் பிரதம விருந்தினராகவும், தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் எஸ். பி. கேபாப்பா, தென்மராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ரஞ்சன், கொடிகாமம் கொத்தணி அதிபர் ச. சின்னத்தம்பி மந்துவில் பிரதேசப் பொறுப்பாளர் வேல்ஸ், வரணி பிரதேசப் பொறுப்பாளர் சோமஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

இவ் விழாவில் பாடசாலை மாணவர்களுக்கான புதிர்ப் போட்டி, கவியரங்கம், பட்டிமன்றம் ஆகிய நிகழ்ச்சிகளும் 'ஒரு கொடியில் இருமலர்கள்' 'உரிமைக் குரல்' ஆகிய நாடகங்களும் இடம்பெறும். இதற்கான சகல ஏற்பாடுகளையும் தென்மராட்சி கலைகலாசாரப் பொறுப்பாளர் ஏ.வி. உலகநாதன் மேற்கொண்டுள்ளார். (ப5ஸ்ரீ)

போக்குவரத்துச் சீர்குலைவினால்

# வெங்காய விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்படலாம்

வவுனியாவுக்கு அப்பால் வாகன, ரயில் போக்குவரத்துகள் ஏதும் சிலதினங்களாக இல்லாமையால் யாழ் வெங்காய உற்பத்தியாளர் கலக்கமடைந்துள்ளனர்.

லொறிகளில் கொழும்புக்கு அனுப்பப்பட்ட வெங்காயம் திரும்பக் கொண்டுவரப்பட்டுவிட்டது.

இதனால் சமீப காலமாக உச்சக்கட்டத்தில் இருந்த வெங்காயத்தின் விலை திடீர் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயிகள் இதனால் நஷ்டம் அடையநேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது: (ஸ்ரீ)

# சிறிய செய்திகள்

## றூட் நிறுவன அழைப்பு

தற்போது நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர நிவாரண பணிகளை மேற்கொள்வது பற்றி 207 இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கில் உள்ள றூட் நிறுவனத்தில் இன்று மாலை மூன்று மணிக்கு நடத்தப்படவுள்ள கலந்துரையாடலில் சகல அரசசார்பற்ற நிறுவனங்களையும் தவறாது சமுகம் தருமாறு றூட் நிறுவனம் கேட்டுள்ளது.

## முல்லைத்தீவில் தஞ்சம்

வற்றாப்பளைக்கு வந்த பெருந்தொகையான அடியார்கள் யாழ்ப்பாணம் வர முடியாமல் தண்ணீர் ஊற்று, முள்ளியவளை - முல்லைத்தீவு ஆகிய இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கிளிநொச்சியில் நடைபெற்ற ஹெலிபொம்பர் தாக்குதலால் அவ்வழியால் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. முல்லைத்தீவில் இருந்து வந்த இ. போ. ச. மினிவான்கள். வியாழக்கிழமையாழ்செல்லவிடாதுமுல்லைத்தீவுக்குதிருப்பி அனுப்பப்பட்டன இவ்வாகனங்கள் விஸ்வமடுவுக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படவில்லை, (46)

## ஒப்படைக்கவும்

யாழ் பொலிஸ் நிலையத்தில் உள்ள முக்கியமான பதிவுப் புத்தகங்களை பொதுமக்கள் எடுத்து செல்வதால் தமக்கு பல பாதிப்புக்கள் ஏற்படுமென தமிழ்ப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இப்புத்தகங்களிலேயேபென்சன்விடயங்கள் ,லீவுவிடயங்கள், பதவியுயர்வு விடயங்கள் போன்றவை பதியப்பட்டுள்ளதாகவும் அவற்றை எடுத்தோர் யாழ் வைத்தியசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கும் படியும் கேட்டுள்ளார்கள். (03)

## ஷெல் தாக்குதல்

கிளிநொச்சி இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் இரவு வேளைகளில் தொடர்ந்து ஷெல் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தினர் கிளிநொச்சியைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களை நோக்கி ஷெல்களை ஏவி வருகின்றனர்.

கிளிநொச்சியை அண்மித்த கிராமமக்கள் இச் ஷெல் தாக்குதலால் இடம் பெயர்ந்து வருவதுடன் உணவுப்பொருட்களுக்கும் கஷ்டப்பட்டு வருகின்றனர். (35

## எரிபொருள் இல்லை நகர் ஸ்தம்பிதம்

நேற்றைய தினம் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பகுதிகளிலும் பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்களின் தட்டுப்பாடு காரணமாக சகல போக்குவரத்துச் சேவைகளும் குறைவாகக் காணப்பட்டதுடன், யாழ்குடா நாட்டின் சகல பாடசாலைகளிலும், மாணவர்களினதும் மாணவிகளினதும் வருகை குறைவாகவும், யாழ்நகரில் சனப்புழக்கம் குறைவாகவும் ஓரளவு பதற்றநிலையுடனும் காணப்பட்டது. [(4)

## பஸ் சேவை நிறுத்தம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறைச் சாலையின் பஸ் சேவைகள் நேற்று வெள்ளிக்கிழமைநடைபெறவில்லை. டீசல் இவ்லாமையினாலேயே இந்த பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (15)

## சட்டமூலம் ஏற்கப்பட்டது

வடக்கு கிழக்கு மாகாண சபையை கலைப்பதற்கான புதிய சட்டமூலம் கொழும்பு உயர்நீதி மன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது இப் புதிய சட்ட மூலம் அரசியல் யாப்பிற்கு எந்த வகையிலும் முரணானது அல்ல என உயர் நீதி மன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

## ஹெலி மூலம் பொட்டலம்

திஸ்ஸ விகாரை இராணுவ முகாமுக்கு நேற்று காலை ஹெலி மூலம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. (48)

## கிழக்கில் பலமான நிலை

தமது முன்னைய தாக்குதல்களில் மினி இராணுவ முகாம்கள் இடம் பெற்றன, இப்போது பெரிய முகாம்களும் வெற்றிகரமாகக் கைப்பற்றப்பட்டு வருகின்றன என்று புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கில் தமது பலம் எத்தகையது என்பது தெளிவுற நிருபிக்கப்பட்டுவருகிறது என்றும் அவை கூறின.

## நேற்று மட்டும் முப்பத்தி மூன்று

நேற்று ஐந்தாவது நாளாக நடைபெற்ற மோதல்களில் நேற்று மட்டும் பொலிஸ், இராணுவத்தைச் சேர்ந்த 33 பேர் பலியாகியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## பரீட்சை இல்லை

நேற்றும், இன்றும் நடைபெறவிருந்த உதவி வைத்திய அதிகாரிகளுக்கான பரீட்சை மறு அறிவித்தல் வரை பின் போடப்பட்டுள்ளது. இப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்றுவரை கல்வித்திணைக்களத்திற்கு வந்து சேரவில்லை என வடமாநில கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

## கந்தளாயில் தமிழர்கள் வெளியேற்றம்

கந்தளாயில் 96-97ம் கட்டைகளுக்கிடையில் பலத்த சண்டை தொடர்வதனையடுத்து அங்குள்ள தமிழர்கள் அகதிகளாக வெளியேறி வருவதாக அறிவிக்கப்படுகின்றது

## 3தமிழர் கொலை

தம்பலகாமம் ஜெயபுர வீதியில் மூன்று தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது,

## செட்டிகுளத்தில்..

செட்டிக்குளத்தில் ஏற்பட்ட மோதலில் ஏழு இராணுவத்தினர், கொல்லப்பட்டனர் ஒரு போராளிகாயமடைந்தார்

# ஆயிரம் தொன் மா கப்பலில் வருகிறது

காங்கேசன்துறையை நோக்கி சற்குணா என்ற மாக்கப்பல் திருகோணமலையில் இருந்து புறப்பட்டுள்ளதாக அறியவருகின்றது.

1000 தொன் மா இக்கப்பலில் கொண்டுவரப்படுகின்றது. தற்போது வடபகுதியில் கையிருப்பில் உள்ள மா இன்னமும், மூன்று நாட்களுக்கு மட்டுமே போதுமானது என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அரிசிமற்றும் உப உணவுப்பொருட்கள் போதியளவு கையிருப்பில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் வியாபாரிகள் பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய அவசியம் இல்லை என மேலும் தெரிவிக்கப்பட்டது. (03)

## 'குமுதினி' படையினரால் சோதனை மீன்பிடி படகுகளுக்கு எச்சரிக்கை

குறி காட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கு சென்றுகொண்டிருந்தகுமுதினிப்படகு அதன் பின்னால் சென்றுகொண்டிருந்த மீன் பிடிப்படகு ஒன்றை நயினாதீவு கடற்படையினர் நடுக் கடலில் வைத்து சோதனையிடப்பட்டதாகதெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் சென்று கொண்டிருந்த குமுதினிப்படகும் படையினரால் நடுக்கடலில் நிறுத்தப்பட்டது. இதனால் அப்படகில் பயணம் செய்த பிரயாணிகள் அசம்பாவிதம் நடக்கப் போகின்றதோ என எண்ணி பதற்றமடைந்தனர்.

மீன் பிடி இழுவைப்படகு சோதனை முடிவடைந்ததும் குமுதினிப்படகைசெல்வதற்கு படையினரால் அனுமதி வழங்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க மீனவர்களை நோக்கி மீன் பிடிக்க போக வேண்டாமெனவும் எச்சரிக்கப்பட்டனர்.

இந்தநிலையால்மீன்பிடிறோலர்கள் ஒன்றும்நேற்றுசேவையில் ஈடுபட வில்லை எனதெரிய வருகிறது. (20

## வடமராட்சியில் கடற்படை மீனவர்களுக்கும் மிரட்டல்

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் இலங்கைக் கடற்படைக்கு சொந்தமான மூன்று பாரிய கப்பல்கள் தரித்து நிற்பதனை அவதானிக்க முடிகின்றது. கடற்படை படகுகளும்நடமாடுகின்றன.

நேற்று முன் தினம் இப் பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவரை மேற்படி கடற்படைகள் மிரட்டியதோடு இப்பகுதி கடற் பகுதிகளில் நடமாட வேண்டாமெனவும்எச்சரிக்கைவிடப்பட்டதாகவும் மேற்படி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (44)

## அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தற்போதைய நிலைமைகள் குறித்து வெளிநாட்டவர்க்கு விளக்கம்

வடக்கு கிழக்கில் தற்போது நிலவும் நிலைமைகள் குறித்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதுவர்களுக்கு விளக்கியுள்ளார்.

நேற்று மாலை பாராளுமன்ற கட்டிடத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் வெளிநாடுகளைச் சேர்ந்த 36 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

**தலைமன்னார்...**

மருந்துகள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன. இச்சம்பவத்தில் காயமடைந்த பொது மக்கள் மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (93 ஸ்ரீ)

**புலிகள்...**

நான்கு மணித்தியாலங்கள் நீடித்தன.

தற்போது எழுந்துள்ள நெருக்கடி நிலை, அதன்பின்னணி மற்றும் முக்கிய விடயங்கள் தொடர்பாக கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

மிகப் பிரதானமாக யுத்த நிறுத்தம் பற்றியே அரசின் சார்பில் அமைச்சர் விடுதலைப் புலிகளிடம் கேட்டுக் கொண்டார் எனத் தெரிய வந்துள்ளது.

பரஸ்பரம் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டபின் தத்தம் தலைமைப் பீடத்துடன் கலந்தாலோசனை நடத்தியபின் இன்று காலை 9.30 மணிக்கு மீண்டும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

நல்லூரில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் அரசின் சார்பில் அமைச்சர் ஹமீதும், புலிகள் சார்பில் திருவாளர்கள் கோ. மகேந்திரராஜா (மாத்தயா), யோகரத்தினம் (யோகி), கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தையின் பின் அமைச்சர் பிற்பகல் கொழும்பு திரும்பினார்.

## பெறுமதியான பொருட்கள் பாதுகாப்பான இடங்களில்

வடபகுதியில் உள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தகநிலையங்களில் உள்ள பெறுமதியான பொருட்களை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்கின்றனர்.

கடந்த சில நாட்களாக தமிழ்ப் பகுதிகளில் ஏற்பட்ட பதற்றநிலையினாலேயேமேற்படி நடவடிக்கையில் வர்த்தகர்கள் ஈடுபட்டுள்ளார்கள்,

இதேவேளை உணவுப் பொருட்களின் விற்பனை கடந்த சிலநாட்களாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது (03)

## கிளிநொச்சி ராணுவத்தினரின் கண்ணில்படுவோருக்கு சூடு

கிளிநொச்சியில் அமைதி நிலை ஏற்பட்ட போதும் இடையிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் உள்ளன,

பஸ்நிலைய இராணுவத்தினர் தமது கண்ணில்படுவோரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது,

சந்தையை பார்வையிட வந்த பெண் வியாபாரி ஒருவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார், (03-35

**பலாலி ..**

களும் ஷெல் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

ஷெல் தாக்குதல்களினால் படுகாயமடைந்த பலர் யாழ் போதனா வைத்திய சாலையிலும் தெல்லிப்பழைவைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் மொத்த எண்ணிக்கை முழுமையாகத் தெரியவரவில்லை.

மயிலிட்டியில் விழுந்த ஷெல்லினால் ஒன்பது மாத குழந்தை உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்

பிந்திக்கிடைத்த செய்திகளின்படி பலாலியில் நேற்று இடம் பெற்ற தாக்குதலில் பொது மக்கள் பலியாகியுள்ளனர் அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு உஷாந்தான் வயது 3, பிரபாகரன் 6, ராணி 35,(தாயும் மகனும்) விஜிதா 13, கமலபாக்கியம்,

**உப்புவெளி...**

விக்கப்படுகிறது. சாந்தன் என்ற போராளி வீரமரணமடைந்தார்.

பொத்துவிலில் ஏற்பட்ட மோதலில் டேவிட், ராவ் என்ற இரு போராளிகள் வீரமரணம் எய்தினர்.

**புனானையில்...**

சண்டை தொடர்வதாகத் தெரியவருகிறது.

கும்புறு மூலையில் ஒரு போராளி வீரமரணமடைந்துள்ளார்.

65, விஜயகுமார் 23,

இவர்கள்யாவரும் மயிலிட்டி நாவலடியைச் சேர்ந்தவர்களாவர்

இச்செய்திஎழுதப்படும்வரை பலாலியில் கடும் சண்டை இடம் பெற்று வருவதாகவும் ஷெல் வீச்சுகள் தொடர்ந்து இடம் பெறுவதாகவும் தெரியவருகின்றது. (03-48)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட்! நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ம் இலக்கத்திலுள்ள அச்சகப்பதிவில் 16-06-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது